Lead

## ஈரான் - இலங்கை உறவு வளர்ச்சிக்கு எல்லை இல்லை
### ஈரான் ஜனாதிபதி அறிவிப்பு
### ஈரானின் சமாதான அணு திட்டத்துக்கு இலங்கை ஆதரவு
### இலங்கை ஜனாதிபதி தெரிவிப்பு
(நவமணி செய்தியாளர்)

இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஈரானுக்கு விஜயம் செய்தபோது அவருடன் செய்துகொள்ளப்பட்ட அனைத்து உடன்படிக்கைகளும் அமுல்நடத்தப்படும்.

ஈரானுக்கும் இலங்கைக்கும் இடையில் சகல துறைகளிலும் உறவுகள் பலப்படுத்தப்படும். இரு நாட்டு உறவு வளர்ச்சிகளுக்கிடையில் எல்லையே இருக்காது.

இவ்வாறு இலங்கைக்கு விஜயம் செய்த ஈரான் இஸ்லாமியக் குடியரசின் ஜனாதிபதி அஹமது நஜாத் அறிவித்தார்.

சமாதான நோக்கத்துக்கான ஈரானின் அணு சக்தி திட்டங்களை இலங்கை முழுமையாக ஆதரிக்கிறது.

ஈரான் பிராந்திய ரீதியிலும் உலக ரீதியிலும் தரும் உதவிகள், ஒத்துழைப்பு களை மதிக்கிறோம். மனமார்ந்த நன்றி களைத் தெரிவிக்கிறோம் என்று இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

இலங்கைக்கு விஜயம் செய்த ஈரான் இஸ்லாமியக் குடியரசின் ஜனாதிபதி அஹமது நஜாதுக்கு கட்டுநாயக சர்வதேச விமான நிலையத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் மாபெரும் வரவேற்பு அளிக்கப் பட்டது.

இரு நாட்டு ஜனாதிபதிகளும் கொழும்பில் தனியாக சந்தித்து இரு நாட்டு உறவுகளை யும் பலப்படுத்துவது குறித்து உத்தியோகபூர்வ பேச்சுவார்த்தை நடத்தினர்.

பின்னர் ஜனாதிபதி செயலகத்தில் இரு நாடுகளுக்குமிடையிலான உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டன.

இங்கு உரையாற்றிய ஈரான் ஜனாதிபதி தனது நாடு தொழிநுட்பத் துறையில் அடைந் துள்ள முன்னேற்றத்தின் பயன்கள் இலங் கைக்கும் வழங்கப்படும் என்று உறுதியும் தெரிவித்தார்.

ஈரானின் உறவை பெரிதும் வரவேற்ற ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஜனநாயகத்தில் இலங்கை காட்டிவரும் தீவிர கரிசனையையும் விபரித்தார்.

எல்.ரி.ரி.ஈ.யிடமிருந்து முழுமையாக விடுவிக்கப்பட்டுள்ள கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வசிப்பதாக வும் அங்கு ஜனநாயகத்தை நிலைபெற செய்ய மாகாணசபை தேர்தல் நடைபெறுவ தாகவும் கிழக்கில் மட்டுமல்ல, நாடு முழுவதி லும் வாழும் மூவின மக்களதும் ஐக்கியம், சமாதான சகவாழ்வு ஆகியவற்றில் அரசு கவனம் செலுத்துவதாகவும் ஜனாதிபதி மஹிந்த ராாஜபக்ஷ தெரிவித்தார்.

Editorial

## பஸ்களில் குண்டுவெடிப்பு!

இரத்த வெறி பிடித்த பயங்கரவாதிகளின் குண்டு வெடிப்புக்கு பல போக்குவரத்து பஸ்கள் பலியாகி விட்டன. ஒரு பாவமும் அறியாத அப்பாவி பஸ் பிரயாணிகளான பெண்கள், சிறுவர், வயோதிபர்கள் பலர் குறித்த குண்டு வெடிப்புகளால் அநியாயமாக உயிர்களைப் பலி கொடுத்திருக்கிறார்கள்.

ஒவ்வொரு தடவையும் குண்டு வெடிப்புகள் இடம்பெற்று அப்பாவி உயிர்கள் பலியாகும்போது பாதுகாப்பு நடவடிக்கைகள் பற்றி பரவலாகப் பேசப்படும். ஆனால் அப்பாவி பயணிகளை பாதுகாக்கும் நடவடிக்கை எதுவும் அர்த்தமுள்ளதாக அமுல் நடத்தப்படவே இல்லை.

‘‘உங்களுக்கு அருகே குண்டுகள் இருக்கலாம் கவனமாக இருங்கள்’’ என்று பஸ்களில் அறிவித்தல்கள் காணப்படுகின்றன. என்றாலும் அந்த அபாய குண்டை பயணிகளுக்கு அருகே வரச் செய்யாமலிருக்க எந்த திட்டமும் இல்லை நடவடிக்கையும் இல்லை.

பஸ்களில் பயணிப்பவர்கள் பணக்காரர்கள் அல்லர். அன்றாடம் உடல் வருத்தி உழைக்கும் ஏழை எளியோரே பஸ்களில் பயணம் செய்கின்றனர். ஏழைகளின் வாகனம் தான் பஸ் எனக் கூறப்படுகிறது. ஆனால் அந்த பஸ்களில் ஏழைகள் நிம்மதியாக அச்சமின்றி பயணம்

செய்ய முடிகிறதா? இல்லை, இல்லவே இல்லை. வடக்கு கிழக்கில் மட்டுமல்ல நாட்டின் எந்த பிரதேசத்திலும் இன்று மக்கள் அச்சமின்றி பயணிக்க முடியாத நிலை.

வடக்குகிழக்குக்கு வெளியே பொதுமக்கள் கூடும் இடங்கள், பயணிக்கும் பஸ்கள் ஆகியவற்றில் குண்டுகளை வெடிக்க வைப்பதில் பயங்கரவாதிகள் தீவிரம் காட்டுகின்றனர். அப்பாவிகளின் உயிர்களைப் பறிக்கும்போது அரசு பணிந்து விடும் என்பது பயங்கரவாதிகளின் எண்ணம் போலும்.

எது எப்படியோ, அப்பாவி உயிர்கள் அநியாயமாக படுகொலை செய்யப்படுவதை அரசு தொடர்ந்தும் அனுமதிக்கலாமா? மனித உயிர்கள் பெறுமதிமிக்கவை. விலைமதிக்க முடியாதவை. அவற்றை மிலேச்சத்தனமான முறையில் பயங்கரவாதிகள் பறிக்க இடம் கொடுக்க முடியுமா?

ஒரு சம்பவம் நடைபெற்ற பின் அந்த இடத்துக்கு பாதுகாப்புப்படையினர் விரைந்து சென்று பாதுகாப்பை பலப்படுத்தும் செயல்பாடு விவேகமானதல்ல. சம்பவமே நடைபெறாமல் பார்த்துக்கொள்ளும் பாதுகாப்பு செயல்பாடு தான் விவேகமானது. அதனைச் செய்வதாயின் கண்டிப்பாக முன்னெச்சரிக்கையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். பஸ் குண்டுவெடிப்புகளைத் தடுப்பதாயின் பஸ் சாரதிகள், நடத்துனர்கள் ஆகியோரின் முழுமையான ஒத்துழைப்பு பெறப்பட வேண்டும்.

'குண்டுகள் இருக்கலாம் கவனம்' என்று எல்லா பஸ்களிலும் போஸ்டர்கள் ஒட்டினால் மட்டும் குண்டு வெடிப்பைத் தடுக்க முடியாது. குண்டுப் பார்சல்கள் எந்த ரீதியிலும் பஸ்களுக்குள் கொண்டு வரப்படுவதைத் தடுப்பதால் மட்டுமே பயணிகளின் உயிர்களைப் பாதுகாக்க முடியும். அதற்கு சாரதிகள் நடத்துனர்கள் மத்தியில் எச்சரிக்கையை, உஷாரை, விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.

பிரயாணிகள் தம்முடன் எடுத்துச் செல்லும் பொருட்களை சாரதிகளும் நடத்துனர்களும் அவசியம் கண்காணிக்க வேண்டும். பொதிகளுடன் எந்த பயணியாவது பஸ்களுக்குள் ஏறினால் அவர்களை விசாரிக்க வேண்டும். அவர்களது அடையாளங்களை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். ஏனைய பயணிகள் மத்தியில் அவர்களது பொதிகள் பற்றி விசாரிக்கப்படும்போது பயணிகள் அனைவரும் குறித்த நபர் குறித்து விழிப்படைவார்கள். அவரது செயல்பாடுகள் உற்றுநோக்கப்படுமிடத்து பொதிகளை வைத்து விட்டு மெல்ல தப்பியோட முடியாத நிலை ஏற்படும்.

ஆனால் இன்று பல சாரதிகளும் நடத்துனர்களும் பயணிகள் எடுத்து வரும் பொதிகள் குறித்து கரிசனை காட்டுவதே இல்லை. எந்தப் பொதியுடன் எவர் வந்தாலும் அவரை ஏற்றிக்கொண்டு பஸ்ஸை நிரப்புவதே அவர்களது குறிக்கோள். இதனால்தான் பஸ்களுக்குள் குண்டுப் பொதிகள் தடையின்றி எடுத்துச் செல்லப்படுகின்றன. பஸ்களை சேவையில் ஈடுபடுத்துவோர் பணம் சம்பாதிப்பதை மட்டும் குறிக்கோளாகக் கொள்ளக்கூடாது. தமது பஸ்களில் பயணிகள் பாதுகாப்பாக பயணிப்பதையும் உறுதி செய்ய வேண்டும். கட்டணம் செலுத்தி தமது பஸ்களில் பயணம் செய்வோரைப் பாதுகாப்பது தான் மாபெரும் மக்கள் சேவை.

சந்தேகத்துக்குரிய பொருட்களுடன் எவர் வந்தாலும் அவரை பஸ்ஸுக்குள் அனுமதிக்கக் கூடாது. ஒரு சந்தேக நபர் பலரின் உயிர்களுக்கு இன்னல் விளைவிக்க இடமளிக்கக் கூடாது. எனவே தனியார் பஸ்ஸோ, இலங்கை போக்குவரத்து சபையின் பஸ்ஸோ எந்த பஸ்ஸாயினும் பயணிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்த அரசு கடுமையான சட்ட திட்டங்களைக் கொண்டு வர வேண்டும். ஒரு பஸ்ஸுக்குள் குண்டு வெடிப்பு இடம் பெற்றால் அந்த பஸ்ஸில் பணிபுரியும் சாரதியும் நடத்துனருமே பொறுப்பு கூற வேண்டும் என்ற கட்டாயத்தை ஏற்படுத்த வேண்டும். பயணிகளின் பாதுகாப்புக்கு உத்தரவாதத்தை அளிக்காத சாரதியையும் நடத்துனரையும் கடுமையாக கண்டிக்கவும் சட்டம் அவசியம்.

பஸ்களில் மட்டுமல்ல ரயில்களிலும் குண்டுகள் வெடிக்கின்றன. பல உயிர்கள் பலியாகின்றன. எனவே போக்குவரத்து சாதனம் எதுவாக இருப்பினும் பாதுகாப்பு உத்தரவாதம் பயணிகளுக்கு முழுமையாக வழங்கப்பட வேண்டும். சில சோதனைச் சாவடிகளில் பஸ் பயணிகளைக் கீழே இறங்கி வரச்செய்து அடையாள அட்டையை மட்டும் பரிசோதிக்கிறார்கள். பஸ்களுக்குள் ஏறி பார்சல்கள் போன்றவை இருந்தால் அவற்றைப் பரிசோதிப்பதில் கரிசனை காட்டுவதில்லை.

பாதுகாப்பு விடயத்தில் தப்பு, தவறு எங்கெல்லாம் விடப்படுகிறதோ, அங்கெல்லாம் உயிராபத்து ஏற்படுகிறது. பயங்கரவாதிகள் விழிப்புடனிருந்து பாதுகாப்பு ஏற்பாடுகளிலுள்ள

ஓட்டைகளைப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். உயிர்கள் பலியான பின் விசாரணை நடத்தி பாதுகாப்பில் ஏற்பட்டிருந்த ஓட்டையைக் கண்டுபிடிப்பதில் பயனில்லை.

குண்டு வெடிப்புகளால் பொருள் சேதமும் பெருமளவில் ஏற்படுகிறது. நாட்டின் செல்வம் வீணாக அழிய இடமளிப்பது மிகப்பெரிய தவறு அல்லவா? எனவே போக்குவரத்து சேவைகளில் கூடிய கவனம் செலுத்தி பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும்.

## தேர்தல் கண்காணிப்பும் அரசியல்மயம்!

- பிளேட்டோ

அமெரிக்காவில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவிருக்கிறது. அதற்கு முன்னர் இரண்டு பிரதான கட்சிகளான டிமொக்கிரடிக் அல்லது ஜனநாயக கட்சியும் ரிப்பப்லிகன் அல்லது குடியரசு கட்சியும் தத்தமது வேட்பாளர்களை தெரிவு செய்யும் பணியில் ஈடுபட்டுள்ளது.

இலங்கையில் போல் கட்சித் தலைவர் வேட்பாளரை தீர்மானிக்கும் வழமை அங்கு இல்லை. கட்சி அங்கத்தவர்களால் பிரேரிக்கப்பட்ட வேட்பாளர்களில் ஒருவர் அங்கத்தவர்களின் வாக்குகளாலேயே கட்சியின் போட்டியாளர்களாக தெரிவு செய்யப்படுவர்.

இப்போது அந்த பணி நடந்து வருகின்றது. குடியரசு கட்சியின் போட்டியாளராக மக்கேன் ஏற்கனவே தெரிவு செய்யப்பட்டுள்ளார். ஜனநாயக கட்சியின் வேட்பாளர்கள் இருவரான பரக் ஒபாமா மற்றும் ஹிலரி கிளின்டன் ஆகியோக்கிடையில் இப்போது போட்டி நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது.

பல மாநிலங்களில் ஹிலரி வெற்றி பெற்றார். வேறு பல மாநிலங்களில் ஒபாமா வெற்றி பெற்றார்.

ஆயினும் இந்தத் தேர்தலின்போது வன்முறை சம்பவங்கள் இடம்பெற்றதாக செய்திகளே இல்லை. அவ்வாறான சம்பவங்கள் இடம்பெற்று இருந்தால் அமெரிக்க ஊடகங்கள் அவற்றை வெளியிடாமல் இருக்கப் போவதுமில்லை.

கட்சிக்குள் நடைபெறும் போட்டியின்போது மட்டுமன்றி ஜனாதிபதி பதவிக்காக கட்சிகளுக்கிடையே நடைபெறும் தேர்தலின்போதும் அங்கு அடிதடி போன்ற வன்செயல்கள் பெரிதாக இடம்பெறுவதாக தெரியவில்லை.

ஆனால் தேர்தல்களின்போது அரவே ஊழல்கள், மோசடிகள் நடைபெறாமல் இல்லை.

அமெரிக்காவின் கலாசாரமும் அதன் வெளியுறவுக் கொள்கையும் மிகவும் அறுவறுக்கத்தக்கதாக இருந்தபோதும் தேர்தல்களின்போத காணக்கூடிய வன்முறையற்ற நிலைமையை இலங்கையின் நிலைமையோடு ஒப்பிடுவதற்காகவே நாம் அதனை இங்கு குறிப்பிடுகிறோம்.

### ஆசியாவில் நிலைமை வேறு

இலங்கையில் நிலைமை இதற்கு நேர்மாறாக இருக்கிறது. இலங்கையில் மட்டுமன்றி, ஆசியாவின் பல நாடுகளின் நிலைமை இதற்கு மாறாக இருக்கின்றது.

எனவே இலங்கையில் தேர்தல் கண்காணிப்புக்காக நிரந்தர அமைப்புகளும் உருவாகி இருக்கின்றன.

1980களின் இறுதியிலிருந்தே செயற்பட்டுவரும் கண்காணிப்பு அமைப்புகளும் இருக்கின்றன. சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல்களுக்கான மக்கள் அமைப்பு அல்லது பெப்ரல் (PAFFREL) அமைப்பு அவ்வாறானதொன்றாகும்.

தேர்தல் வன்முறைகளை கண்காணிக்கும் அமைப்பு அல்லது சீ.எம்.ஈ.வி. (CMEV) மற்றதொன்றாகும். இந்த அமைப்பு தற்போது செயலிழந்து கிடப்பதாக தெரிகிறது.

கடந்த மார்ச் மாதம் நடைபெற்ற மட்டக்களப்பு மாவட்ட உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்களை அடுத்து மற்றொரு புதிய அமைப்பும் உருவாகியுள்ளது.

நிரந்தர தேர்தல் கண்காணிப்புக்கான அமைப்புக்கள் உருவானதிலிருந்து தேர்தல் வன்முறைகளும் தேர்தல் சட்டமீறல்களும் நிரந்தரமானவையாக இருப்பதை முழு உலகமே உணர்ந்திருக்கும்.

அநேகமாக நாடாளுமன்ற தேர்தலாக இருந்தாலும் மாகாணசபை தேர்தலாக இருந்தாலும் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்களாக இருந்தாலும் மத்திய அரசாங்கத்தின் ஆளும்கட்சியே

தேர்தல் வன்முறைகளிலும் தேர்தல் சட்டமீறல்களிலும் கூடுதலாக ஈடுபடும்.

ஏனைய கட்சிகள் அதனை குறைகூறிக்கொண்டு தம்மால் இயன்ற அளவில் வன்முறைகளிலும் சட்டமீறல்களிலும் ஈடுபடும்.

ஆளும்கட்சி மக்களின் வெறுப்புக்கு இலக்காகி அது தோல்வியடையும் நிலையில் இருந்த சமயங்களில் நடைபெற்ற தேர்தல்களின்போது தேர்தல் வன்முறைகளும் சட்டமீறல்களும் மிகவும் குறைவாகி இருந்துள்ளன.

ஆளும்கட்சியும் எதிர்க்கட்சியும் தேர்தல் முடிவுகள் எப்படி அமையுமோ, விரைவில் தாம் பலிவாங்கப்படுவோமோ என்ற அச்ச நிலையில் இருப்பதே இதற்குக் காரணமாகும்.

உதாரணமாக 1994ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் ஜனாதிபதி டி.பி. விஜேதுங்கவின் காலத்தின் இறுதியில் நடைபெற்ற பொதுத் தேர்தலையும் அதேயாண்டு நவம்பர் மாதம் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலையும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் ஆட்சிக்காலத்தில் இறுதியில் 2005ம் ஆண்டு டிசம்பர் மாதம் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலையும் குறிப்பிடலாம்.

## ஒரு வித்தியாசமான உதாரணம்

ஒரு வித்தியாசமான உதாரணமாக கடந்த மார்ச் 10ம் திகதி நடைபெற்ற மட்டக்களப்பு மாவட்ட உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்களையும் குறிப்பிடலாம்.

அந்தத் தேர்தலின்போது ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டணியும் பிள்ளையான் குழு எனப்படும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியும் இணைந்து போட்டியிட்டன.

அந்தக் கூட்டணியோடு சவால்விட்டு போட்டியிடக்கூடிய கட்சியொன்று இருக்கவில்லை. முஸ்லிம் பிரதேசங்களில் மட்டும் ஸ்ரீ.ல.மு.கா. அக்கூட்டணிக்கு சவாலாக இருந்தது.

எனவே போட்டியில்லாத இடங்களில் வன்முறைகள் இடம்பெறவில்லை. வாழைச்சேனை போன்ற முஸ்லிம் பிரதேசங்களில் ஆளும்கட்சி வன்முறைகளில் ஈடுபட்டது.

இந்த நிலையில் மட்டக்களப்பு மாவட்ட உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் ஏறத்தாள வன்முறைகளின்றி நடைபெற்றது என பெப்ரல் அமைப்பு கூறியது.

ஆனால் வன்முறைகள் பெரிதாக வெடிக்க வேண்டும். அதனை வைத்து தாம் அரசாங்கத்திற்கு எதிராகப் சர்வதேச ரீதியில் பெரும் நெருக்குதலை ஏற்படுத்த முடியும். அதன்மூலம் தாம் அரசியல் ரீதியாக இலாபமடைய முடியும் என பிரதான எதிர்க்கட்சி நினைத்தது.

அது முடியாமல் போகவே அக்கட்சியுடன் நெருக்கமான சில அரச சார்பற்ற இயக்கங்களின் பிரதிநிதிகள் மற்றொரு தேர்தல் கண்காணிப்பு அமைப்பை உருவாக்கி இருக்கிறார்கள்.

எனவே இப்போது தேர்தல் கண்காணிப்பு அரசியல்மயமாக்கப்பட்டுள்ளது அல்லது அரசியல்மயமாக்கப்படப் போகிறது.

மட்டக்களப்பு மாவட்ட உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்களைப்போலன்றி அடுத்த மாதம் 10ம் திகதி நடைபெறவிருக்கும் கிழக்கு மாகாணசபைகளுக்கான முதலாவது தேர்தலின்போது ஆளும் ஐ.ம.சு.மு. மற்றும் பிள்ளையான் குழுவின் கூட்டணிக்கு இலகுவான வெற்றி கிடைக்குமென கூறமுடியாது.

எனவே இந்தத் தேர்தலின்போது வன்முறையற்ற, சட்டமீறல்களற்ற நிலைமையை எதிர்பார்க்க முடியாது.

ஏற்கனவே கொலைகளும் குண்டுத்தாக்குதல்களும் இடம்பெற்றுள்ளன. ஆளும்கட்சி அரச வாகனங்கள், அரச ஊழியர்கள், அரச வளங்கள் ஆகியவற்றை தேர்தல் பணிக்காக உபயோகிப்பதாக ஐ.தே.க.வும் தேர்தல் கண்காணிப்பாளர்களும் கூறி வருகிறார்கள்.

பல டசின் அமைச்சர்கள் தேர்தல் பணிக்காக அம்பாறை, மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் தளமிட்டு இருக்கிறார்கள்.

அவர்கள் அனைவரும் அவர்களது அலுவலர்களும் அரச வாகனங்களையே அநேகமாக பாவிக்கிறார்கள்.

இது இந்த அரசாங்கம் மட்டும் செய்யும் தவறல்ல. ஐ.தே.க. பதவியில் இருக்கும்போதும் தேர்தல்களின்போது ஆளும்கட்சி அரச வளங்களை மனம்போல் பாவித்தது.

இந்தியாவில் தேர்தல் ஆணையகத்திற்கு இதுபோன்ற குற்றங்களை தடுப்பதற்கு அதிகாரம் இருக்கிறது. தேர்தல் காலத்தில் அபிவிருத்தி திட்டங்களை அறிமுகப்படுத்துவதையும் இந்திய

தேர்தல் ஆணையகம் தடுக்கிறது.

தேர்தலின்போது வேட்பாளர்கள் செலவிடும் பணத்தையும் இந்திய தேர்தல் ஆணையகம் கண்காணிக்கிறது. அவ்வாறானதோர் முறைமை இல்லாமல் தேர்தலுக்காக அரச வளங்களை துஷ்பிரயோகம் செய்வதை தடுக்க முடியாது.

## அமைச்சர் ஜெயராஜ் படுகொலை
## 9 பேர் கைது!
## பெரும்பான்மையினர் சிங்களவர்கள்
## ‘சிம்காட்’ காட்டிக்கொடுத்தது

(ரூஸோ)

நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளேயின் படுகொலை தொடர்பாக இதுவரை ஒன்பது பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

வெலிவேரியவில் படுகொலை நடைபெற்ற இடத்தில் கண்டெடுக்கப்பட்ட கையடக்கத் தொலைபேசியின் சிம்மின் மூலம் கிடைத்த தகவல்களினடிப்படையிலே இந்த ஒன்பது பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டுள்ள ஒன்பது பேரில் பெரும்பான்மையினர் சிங்களவர்களாவார்கள். இவர்களில் அநேகர் படுகொலைக்கு நேரடியாகவன்றி மறைமுகமாக உதவியுள்ளதாக விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

தற்கொலைதாரியின் விகாரமடைந்த தலை அவர் பயன்படுத்திய அடையாள அட்டை மற்றும் சேதமடைந்த சிம்காட் ஆகியனவே விசாரணை நடத்தும் அதிகாரிகளுக்கு கிடைத்திருந்தது.

கண்டெடுக்கப்பட்ட அடையாள அட்டை ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தினால் வழங்கப்பட்டதல்ல எனத் தெரிய வந்துள்ளது. 862763479 V இலக்கமுடைய 2006 நவம்பர் மாதம் 16ம் திகதி விநியோகிக்கப்பட்ட இந்த அடையாள உரிமையாளர் வாழைச்சேனை பிறைந்துறைச்சேனையைச் சேர்ந்த வெல்ல தம்பி முஹம்மத் அமீன் என்பவராவார். இவரது தொழில் மாணவன் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

வாழைச்சேனை பிறைந்துறைச்சேனைக்குச் சென்ற இரகசியப் பொலிஸ் அதிகாரிகள் முழு ஊரிலுமே இப்படி ஒருவர் இல்லை என்பதை தெரிந்துகொண்டனர்.

கையடக்க தொலைபேசி தொடர்பாக விசாரணை நடத்திய அதிகாரிகள் அது பற்றிய சிறந்த அறிவும் அனுபவமுடையவர்களாவார்கள். தமக்குக் கிடைத்த கையடக்க தொலைபேசிகள் பற்றி விசாரணை நடத்திய அதிகாரிகளுக்கு ஆரம்ப விசாரணையின்போது முக்கியமான துப்புகள் எதுவும் கிடைக்கவில்லை. அதற்குக் காரணம் கண்டெடுக்கப்பட்ட தொலைபேசிகள் அநேகமானவை தாக்குதலுக்கிலக்காகி மரணித்தவர்களுடையதாகும். உடைந்து காணப்பட்ட மூன்று தொலைபேசிகளில் இரண்டு சிம்காட்கள் குறித்து விசாரணை நடத்தினர்.

சேதமடைந்திருந்த சிம் காட்டினை வேறு தொலைபேசியில் பொறுத்தி தகவல்களை அறிவது கஷ்டமாகையால் அதிகாரிகளது அவதானம் வெலிவேரிய பிரதேசத்திற்கு இணைப்பினை வழங்கும் பிரதான கையடக்கத் தொலைபேசி நிறுவனங்களது கோபுரம் மீதாகும். படுகொலை நடைபெற முன் அப்பிரதேசத்திலிருந்து பரிமாறிய சகல தொலைபேசி அழைப்புக்களது விபரங்களையும் இரகசியப் பொலிஸார் பெற்றனர். ஆயிரக்கணக்கான இலக்கங்களைப் பரிசோதித்த அதிகாரிகள் தற்கொலைதாரி பயன்படுத்திய இலக்கத்தைக் கண்டுபிடித்தனர். அது முன்கட்டணஞ் செலுத்தப்பட்ட பிரிபேட் காட்டாகும். சிங்களவர் ஒருவர் பெயரிலே அந்த காட் வழங்கப்பட்டிருந்தது. இந்தக் கொலையை நெறிப்படுத்தியவரது தொலைபேசியும்கூட சிங்களவர் ஒருவரது பெயருக்கே பெறப்பட்டுள்ளது.

விசாரணையின்போது கொலையை நெறிப்படுத்தியவரது தொலைபேசியின் சிம்காட் தற்போதும் பாவிக்கப்படுவதனைக் கண்டுபிடித்தனர். ஹிக்கடுவைவாசி ஒருவரது கையிலே இந்த தொலைபேசி இருந்தது. அதிகாரிகள் அவரைக் கைது செய்தனர். அவரும் ஒரு சிங்களவராவார். இந்த தொலைபேசியை கொழும்பு, காலி தனியார் பஸ் ஒன்றில் தான் கண்டெடுத்ததாக கூறியுள்ளார். அமைச்சர் கொல்லப்பட்ட தினத்தன்று மாலையே இந்த சிம்மினைக் கண்டெடுத்துள்ளார். கொலையை நெறிப்படுத்தியவர் கொலை நடந்தவுடன் வெலிவேரியவிலிருந்து கொழும்பு வந்து அங்கிருந்து காலி பஸ்ஸில் ஏறிச் சென்றுள்ளார்

என்பதனை இது உறுதிப்படுத்துகின்றது. கொலையை திட்டமிட்டவர் தனது தொலைபேசியை வேண்டுமென்று வைத்துவிட்டுச் சென்றாரா அல்லது மறந்துவிட்டுச் சென்றாரா என்பதனை அறிய முடியாதுள்ளது.

எவ்வாறானபோதும் அந்தத் தொலைபேசி மூலம் திரட்டிய தகவல்களின்படி தெஹிவளை கவுடான வீதியில் ஓய்வுபெற்ற சிங்கள தம்பதியர் நடத்தும் விடுதி ஒன்றை பொலிஸார் முற்றுகையிட்டனர். அந்த வீட்டில் வாடகைக்கு இருந்தவர்களில் அதிகமானோர் தமிழர்களாவார்கள். வீட்டுரிமையாளரான பெண்ணினைக் கைது செய்த பொலிஸார் பெருநாள் விடுமுறைக்காக பதுளை சென்றிருந்த அவரது கணவரை பதுளையில் கைது செய்தனர்.

இச்சந்தர்ப்பமாகும்போது தற்கொலைதாரிகளது மூன்று புகைப்படங்கள் பொலிஸார் வசமிருந்தது. இந்தப் படங்களை தெஹிவளை வீட்டில் இருந்தவர்களுக்கு காட்டியபோது தற்கொலைதாரியை அடையாளம் கண்டனர்.

அவர் ராஜா என்பவராவார். இவர் படுகொலை இடம்பெறுவதற்கு பத்து நாட்களுக்கு முன் இந்த விடுதிக்கு வந்துள்ளார். வெளிநாட்டுக்குப் போவதற்கே தான் கொழும்பு வந்ததாகக் கூறியுள்ள இவரிடம் அடையாளத்தை நிரூபிப்பதற்கு எந்த ஆவணமும் இருந்ததில்லை. கல்கிஸ்ஸையில் வசிக்கும் ராணி என்ற தமிழ் பெண்மணியே இவரை அழைத்து வந்துள்ளார். அவரும் இப்போது கைது செய்யப்பட்டுள்ளார்.

கவுடான வீதி வீட்டுக்கு வாடகைக்கு வந்த ராஜாவிடம் ஆவணங்கள் எதுவும் இல்லையாதலால் அவருக்காக தற்காலிக அடையாள அட்டை வழங்கிய சிங்கள பெண் அதிகாரியும் கைது செய்யப்பட்டுள்ளார். வீட்டுரிமையாளரான பெண் 500 ரூபா பணத்தை வாங்கிக் கொடுத்து இந்த அட்டையை வாங்கிக் கொடுத்துள்ளார். இதில் வவுனியா ராஜா எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறு இதுவரை அமைச்சரின் கொலை தொடர்பாக ஒன்பது பேர் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர்.

இக்கொலை தொடர்பாக மேலும் பலர் சம்பந்தப்பட்டுள்ளனர். இவர்களில் கொலையை திட்டமிட்டவர் ஆசிரியை ஒருவர். கொமியுனிகேசன் நிறுவன பெண் ஊழியர் ஒருவரும் உள்ளார்.

## நீண்ட இடைவெளியின் பின்
## படையினர் - புலிகள் நேரடி மோதல்

வடக்கு யுத்தமுனையில் கடந்த வாரத்தில் அரச படைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே கடும் சண்டை இடம்பெற்றது. இதனால் இரு தரப்பினருக்கும் பலத்த உயிர்ச்சேதம் ஏற்பட்டுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை நள்ளிரவு வேளையில் கிளாலி முகமாலையில் அரச படையினர் மீது மேற்கொண்ட தாக்குதலுக்கு படையினர் திருப்பித் தாக்கியுள்ளனர். அதிகாலைவரை இந்த மோதல் நடைபெற்றுள்ளது. 12 மணிநேரமாக நடைபெற்ற இந்த மோதலில் நூற்றுக்கு மேற்பட்ட படைவீரர்கள் கொல்லப்பட்டனர். அதேநேரம் பலர் காணாமல் போயுள்ளனர். இறந்த படைவீரர்களது எண்ணிக்கை தொடர்பாக ஒன்றுக்கொன்று முரண்பட்ட கருத்துக்கள் தெரிவிக்கப்படுகின்றன.

2006ம் ஆண்டு ஆகஸ்ட் 16ம் திகதி இதேபோன்ற தாக்குதல் ஒன்று முகமாலையில் இடம்பெற்றது.

இந்த மோதலில் 81 விடுதலைப் புலிகள் கொல்லப்பட்டதோடு 196 பேருக்கு மேல் காயமடைந்துள்ளதாக பாதுகாப்பு தரப்பினர் தெரிவிக்கின்றனர். விடுதலைப் புலிகளின் சிரேஷ்ட உறுப்பினர்கள் 15 பேர் கொல்லப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

வடக்கு யுத்தத்தில் கடந்த சில மாதங்களாக படையினரை நேருக்கு நேர் முகங்கொடுக்காத விடுதலைப் புலிகள் முகமாலையிலே நேருக்கு நேர் முகங்கொடுத்துள்ளனர். இதற்குக் காரணம் தொடர்ச்சியாகத் தாம் எதிர்நோக்கி வரும் தோல்வியைப் பொறுத்துக்கொண்டு இருக்க முடியாததனால் என்று படையினர் தெரிவிக்கின்றனர்.

## முஸ்லிம்களின் இதயமான அம்பாறையில் தேர்தல் சூடு பறக்கிறது! காணி பறிப்பு விவகாரத்துக்கும் முக்கியத்துவம்!!

கிழக்கு மாகாண சபைக்கான தேர்தல் தினம் விரைவாக நெருங்கிக்கொண்டிருக்கும் இத்தருணத்தில் தேர்தல் பிரசாரங்களும் மூன்று மாவட்டங்களிலும் சூடு பிடித்துள்ளன. அந்த வகையில் அம்பாறை மாவட்டம் தற்போது களைகட்டியுள்ளது. கிழக்கு மாகாணத்தின் அம்பாறை மாவட்டம் முஸ்லிம்களின் இதயம் என குறிப்பிடப்படுகின்றது. இந்த மாவட்டத்தில் முஸ்லிம்களின் காணிகள் பேரினவாதிகளால் சுவீகரிக்கப்படுவதாக வெளியாகும் குற்றச்சாட்டுகளுக்கு மத்தியில் கிழக்கு மாகாண சபைக்கான தேர்தலும் நெருங்கியுள்ளது. எனவே, இந்த பிரச்சினை சூடான விவாதப் பொருளாக தற்போது அம்பாறை மாவட்ட தேர்தல் பிரசாரங்களில் காணப்படுகின்றது.

கடந்த 2001 ஆகஸ்ட் மாதம் தொகை மதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம் மேற்கொண்ட கணக்கெடுப்பின்படி அம்பாறை மாவட்டத்தில் மூன்று இனத்தையும் சேர்ந்த 589344 பேர் வாழ்கிறார்கள். இவர்களில் 245089 முஸ்லிம் மக்கள் 41.59 வீதமாகவும் 233255 சிங்களவர்கள் 40 வீதமாகவும் 110590 தமிழ் மக்கள் 18.70 வீதமாகவும் வாழும் அதேவேளை 410 இந்திய, தமிழர்கள் 0.07 வீதமாக வாழ்வதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டத்தில் 22 சுயேட்சைக் குழுக்கள் அடங்கலாக 33 கட்சிகளிலிருந்து 561 அபேட்சகர்கள் போட்டியிடுவதாக குறிப்பிட்ட அம்பாறை மாவட்ட தேர்தல் ஆணையாளர் ரி.எம்.எல்.டி. தென்னகோன், இவர்களிலிருந்து 14 பேர் கிழக்கு மாகாண சபைக்கான தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட உள்ளதாகவும் குறிப்பிட்டார்.

அம்பாறை மாவட்டத்தில் 430 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படவுள்ளதாக குறிப்பிட்ட தேர்தல் ஆணையாளர் அதற்கான நடவடிக்கைகளில் தேர்தல் திணைக்களம் ஈடுபட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

எனவே கிழக்கு மாகாண சபைக்கான தேர்தல் பிரசாரங்கள் தற்போது அம்பாறையில் சூடுபிடித்துள்ளன. பிரதான கட்சிகளான ஐ.ம.சு. முன்னணிக்கும் ஐ.தே.க.வுக்கும் இடையில் மிகுந்த பலப்பரீட்சையாக அம்பாறை மாவட்டம் காணப்படுகிறது. ஆளுந்தரப்பிலும் எதிர்த்தரப்பிலும் பலம்வாய்ந்தவர்கள் தேர்தல் பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றனர். எனவே பிரசார மழை தீவிரமாக பொழியும் இத்தருணத்தில் தமது வாக்குகளை பெருக்கிக்கொள்ளும் நடவடிக்கைகளில் கட்சிகள் முனைப்பு காட்டி வருவது இங்கு குறிப்பிடத்தக்கது.

## கிழக்கை வடக்கோடு இணைக்கும் சதியை முறியடிக்க தீர்மானம்

(நவமணி செய்தியாளர்)

கிழக்கு மாகாணத்தை மீண்டும் வடக்கோடு இணைக்க திரைமறைவில் எடுக்கப்படும் சதி முயற்சிகளைத் தோற்கடிக்க பாடுபட வேண்டும் என்று தேசிய காங்கிரஸின் திருகோணமலை மாவட்ட மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இம்மாநாடு கிண்ணியா மாஞ்சோலையில் திருகோணமலை தேசிய காங்கிரஸ் அமைப்பாளர் சட்டத்தரணி எச்.எம்.எம். பாயிஸ் தலைமையில் நடைபெற்றது. இம்மாபெரும் மாநாட்டில் பிரதம அதிதியாக தேசிய காங்கிரஸ் தலைவரும் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சருமான ஏ.எல்.எம். அதாவுல்லாஹ் கலந்துகொண்டார்.

இம்மாநாட்டின்போது பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அவை வருமாறு:

கிழக்கு மாகாணம் தனித்தும், சுதந்திரத்தோடும் தொடர்ந்து இயங்குவதை உறுதிப்படுத்த இம்மாகாண சபைத் தேர்தலைப் பயன்படுத்தல்.

தனித்துவமான, சுதந்திர கிழக்கு மாகாணத்திற்கெதிராக செயற்பட்டுக்கொண்டிருக்கும் எல்லா சக்திகளினதும் செயற்பாடுகளை முறியடித்தல்.

கிழக்கு மாகாணத்தில் வாழும் முஸ்லிம், தமிழ், சிங்கள மக்களிடையே இன உறவினை வளர்த்தலும் அவர்களை பாதுகாத்தலும்.

கிழக்கு மாகாணத்தை மீண்டும் வடக்கோடு இணைக்க திரைமறைவில் எடுத்துவரும் சதி முயற்சிகளை தோற்கடிக்கப் பாடுபடல்.

அரசியல், சமூக, கலாசார ரீதியில் பலமிழந்திருக்கும் திருமலை மாவட்ட மக்களுக்கு தேசிய காங்கிரஸ் ஊடாக அரசியல் தலைமை கொடுத்து அவர்களை மீளெழச்செய்தல்.

கிழக்கில் வறுமையை ஒழித்து திட்டமிட்ட அபிவிருத்திகளை செய்வதற்கு பாடுபடுதல்.

1987 ஆம் ஆண்டு கிழக்கு மக்களை கேட்காமல் வடக்கோடு கிழக்கை இணைத்தும் தொடர்ந்து நோர்வேயின் அனுசரணையோடு மீண்டும் ஒப்பந்தமொன்றை செய்ததன் மூலம் கிழக்கு மக்களுக்கு பாரிய துரோகங்களை இழைத்தும் அங்கு வாழும் முஸ்லிம், தமிழ், சிங்கள மக்களின் உறவை சீர்குலைத்து கிழக்கு மாகாணத்தை சின்னாபின்னப்படுத்திய ஐக்கிய தேசிய கட்சியை இம்மாகாண சபைத்தேர்தலில் தோற்கடிக்கப் பாடுபடல்.

கிழக்கின் தனித்துவம், சுதந்திரம் பேணப்படுவதற்கும் அங்கு வாழும் சமூகங்களிடையே நல்லுறவை வளர்த்து அம்மக்கள் நிம்மதிப் பெருவாழ்வு வாழ்வதற்கும் கிழக்கு மாகாண பெரு அபிவிருத்தி காண்பதற்குமாய் இக்கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் வெற்றிலைச் சின்னத்திற்கு வாக்களிப்பதற்கும், திருமலை மாவட்டத்தில் வெற்றிலைச் சின்னத்தில் போட்டியிடும் தேசிய காங்கிரஸ் வேட்பாளர்கள் இருவரையும் வெல்ல வைப்பதற்கும் பாடுபடுதல்.

நாட்டில் எல்லா சமூகங்களும் சமாதானத்தோடு, நிம்மதியோடு வாழ்வதற்கு வழிசமைக்க பாடுபடுதல்.

பயங்கரவாதத்திற்கெதிராக போராடிவரும் அதி மேதகு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் கரத்தைப் பயன்படுத்தல் போன்ற தீர்மானங்கள் தேசிய காங்கிரஸின் பல்லாயிரக்கணக்கான போராளிகளினால் தக்பீர் முழங்க அங்கீகரிக்கப்பட்டன.

இம்மாநாட்டில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றிய அமைச்சர் அதாவுல்லாஹ் மறைந்த தலைவர் அஷ்ரபை நாம் எல்லோரும் ஆதரித்து மரத்தை சின்னமாகக் கொண்டதற்கோ, முஸ்லிம் காங்கிரஸ் என்ற சொற்பதத்திற்கோ அன்று அவரிடமிருந்து சமூகம் தொடர்பான தெளிவான கொள்கைக்காகவே நாம் அவரை ஆதரித்தோம். தலைவர் அஷ்ரப் அவர்களின் கொள்கைக்கு முரணாக இன்று ரவூப் ஹக்கீம் செயற்பட்டு வருகின்றார். மேலும் தலைவர் அஷ்ரப் அவர்கள் மரணிப்பதற்கு முன் ஐக்கிய தேசிய கட்சியின் தலைவராக ரணில் விக்கிரமசிங்க இருக்கும் வரையில் அக்கட்சியை ஆதரிக்க முடியாது எனக் கூறியிருந்தார். ஆனால் ஹக்கீமோ அக்கட்சியினதும், நோர்வேயினதும் எண்ணங்களுக்கு இசைந்து கொண்டிருக்கின்றார். நமது மறைந்த தலைவர் அஷ்ரப் ஒரு போதும் மத்திய மாகாணத்தின் முதலமைச்சராக வரவேண்டும் என்றோ, மத்திய மாகாணத்தின் பாராளுமன்ற உறுப்பினராக வரவேண்டும் என்றோ யோசித்ததில்லை. இருப்பினும் இன்றைய தலைமை கிழக்கு மாகாணத்தின் தலைவராக வரவேண்டும் என கனவு காண்பது அவரின் வங்குரோத்து அரசியலைத் தெளிவாக காட்டுகின்றது. எனவே கிழக்கு மக்கள் எதிர்வரும் 10ஆம் திகதி ஐக்கிய தேசிய கட்சிக்கும் அதன் மேல் வலம் வரும் ரவூப் ஹக்கீமுக்கும் நல்ல பாடம் புகட்டுவார்கள் என அமைச்சர் தனதுரையில் தெரிவித்தார்.

இம்மாநாட்டின்போது தேசிய காங்கிரஸின் துணைத்தலைவர் டாக்டர் ஏ. உதுமாலெப்பை, தேசிய காங்கிரஸ் சார்பில் வெற்றிலைச் சின்னத்தில் போட்டியிடும் சட்டத்தரணி பாயிஸ், நவாஸ் ஆசிரியர், அக்கரைப்பற்று பிரதேச சபையின் தலைவர் ஏ.எல். தவம், திருகோணமலை மாவட்ட பல உலமாக்கள், புத்திஜீவிகள், கழகங்களின் தலைவர்கள், வர்த்தக சங்கங்களின் பிரதிநிதிகள், தேசிய காங்கிரஸின் போராளிகள் பலரும் கலந்து சிறப்பித்தனர்.

## உரிமைக்குரல் கொடுக்கும் மு.கா.வைச் சேர்ந்தவரே முதலமைச்சராக வரவேண்டும்

**அன்ஸார் மௌலானா**

**(இக்ராம் ஆப்தீன்)**

நடைபெறவிருக்கும் மாகாணசபைத் தேர்தலில் நாங்கள் விரும்பி போட்டியிடவில்லை. அரசாங்கம் 13வது சீர்திருத்த சட்டத்தை அமுல்படுத்துவதற்காக வேண்டி அவசர அவசரமாக இத்தேர்தலை நடத்தி கிழக்கில் அமைதி நிலவுகின்றது என்பதை சர்வதேசத்திற்குக் காட்ட முனைகின்றது. எனவே நாம் முஸ்லிம்களுக்கு ஒரு முதலமைச்சரைப் பெற வேண்டும் என்பதற்காகவே இத்தேர்தலில் போட்டியிடுகின்றோம் என அம்பாறை மாவட்டத்தின் ஐக்கிய தேசிய கட்சி வேட்பாளர் எம்.எம். அமீருள் அன்ஸார் மௌலானா தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டத்தில் மாகாணசபைத் தேர்தல் களநிலவரம் தொடர்பாக கருத்துக் கேட்டபோதே அவர் நவமணிக்கு இதனைத் தெரிவித்தார்.

தொடர்ந்தும் அவர் கருத்துக் கூறியதாவது :

கிழக்கின் அதிகாரத்தைப் எவர் பெறுவது என்பதே இங்குள்ள கட்சிகளின் நோக்கமாகும். இங்கு ஆயுதக் குழுவும் போட்டியிடுகின்றது. அதற்கு அரசின் உதவியும் உள்ள நிலையில் ஆயுதக்குழுக்கள் அதிகாரத்தைப் பெறுமானால் நாம் எதிர்பார்க்கும் அமைதி, அபிவிருத்தி அனைத்தும் வீணாகிவிடும்.

அரசாங்கத்துடன் இணைந்து போட்டியிடும் ஹிஸ்புல்லாஹ் முதலமைச்சராக வருவதற்கு அரசாங்கமே தடையாகவுள்ளது. எனவே முஸ்லிம் ஒருவர் முதலமைச்சராக வரவேண்டும் என்பது மாத்திரமல்ல, கிழக்கில் உரிமை தொடர்பான பிரச்சினைகள் உள்ளன. உரிமைகள் தொடர்பாக குரல் கொடுத்துவரும் முஸ்லிம் காங்கிரஸ் சார்பான ஒருவர் முதலமைச்சராக வருவதன் மூலமே எமது பிரச்சினைகளை தீர்க்க முடியும்.

அம்பாறை தீகவாபி காணிப்பிரச்சினை, பொத்துவில் காணிகளை இணைத்து லகுகல பிரதேசசபையை விரிவாக்கும் திட்டம், ஒலுவில், பாலமுனை, சம்மாந்துறை உள்ளடங்கிய பிரதேச சபை அமைக்கப்படவுள்ள திட்டங்கள் என பல பிரச்சினைகள் இங்கு உள்ளன. எனவே இப்பிரச்சினைகளை தீர்க்க வேண்டுமானால் அரசுக்கு அழுத்தங்கள் கொடுக்கக்கூடியவர்களே மாகாணசபை அதிகாரத்தைப் பெற வேண்டும் என அன்ஸார் மௌலானா மேலும் தெரிவித்தார்.

### ஜனாதிபதி பிரேமதாஸவின் 15வது சிரார்த்த தினம்

இலங்கையின் இரண்டாவது செயலதிகாரமிகு ஜனாதிபதி ஆர் பிரேமதாஸவின் 15வது சிரார்த்த தினம் முதலாம் திகதி இடம்பெறுகின்றது.

இதனையிட்டு நாட்டின் பல பாகங்களிலும் நினைவு தின நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன.

பிரதான நிகழ்வு காலை 8.30 மணிக்கு புதுக்கடை நீதிமன்ற அருகிலுள்ள ஜனாதிபதி பிரேமதாஸாவின் சிலைக்கருகே நடைபெறும்.

### பாராளுமன்றம் மே 6ல் கூடுகிறது

பாராளுமன்றம் எதிர்வரும் 6ம் திகதி செவ்வாய்க்கிழமை கூடவுள்ளது.

கிழக்குத் தேர்தல் காரணமாக இம்மாதத்தில் முதல் வாரத்தில் ஒருநாள் மட்டுமே கூடவுள்ளது. அவசரகாலச் சட்டத்தை நீடிக்கும் பிரேரணை இத்தினத்தன்று விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

கம்பஹா மாவட்டத்தின் புதிய எம்.பி.க்களான சரண குணவர்தன, துலிப் விஜேசேகர ஆகிய இருவரும் இத்தினத்தன்று பதவிப் பிரமானஞ் செய்யவுள்ளனர்.

## வாக்களிப்பது அபிவிருத்திக்கா?
## அல்லது வேறு எதற்குமா?

கிழக்கு மாகாண சபை தேர்தல் இரண்டு பிரதான கட்சிகளுக்கும் மிக முக்கியமான ஒரு தேர்தல். அரசு தனது அதிகாரத்தையும் பிரபல்யத்தையும் அளக்கும் அளவுகோலாக இத்தேர்தல் அமைகின்றது.

கிழக்கை புலிகளிடமிருந்து மீட்க அரசாங்கம் கிழக்கு மாகாணசபையின் அதிகாரத்தை கைப்பற்றுவதற்காக விஷேட திட்டங்கள் வகுக்கப்பட்டு முன்னெடுக்கப்படுகிறது.

அரசியல்வாதிகளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வெற்றியை உறுதி செய்வதற்காக கிழக்கில் தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

ஐக்கிய தேசிய கட்சி அரசை கவிழ்க்கும் முயற்சிக்கு முக்கியத்துவம் கொடுக்கும் செயல் திட்டத்தை முன்வைத்தே இத்தேர்தல் களத்தில் குதிக்கின்றது.

அக்கட்சி கடந்த சில மாதங்களாக அரசுக்கு எதிரான எதிர்ப்பு நடவடிக்கைகளை நாடு முழுவதிலும் மும்முரமாக எடுத்து வருகின்றது. அவர்களின் இலக்கு பொதுத் தேர்தல்

ஒன்றை பெற்றுக்கொண்டு அதில் வெற்றி பெறுவது.

நாட்டில் அரச விரோத போக்கு இருப்பதாக காட்டுவதற்கும் அரசுக்கு எதிராக நடவடிக்கைகளை தீவிரப்படுத்துவதற்கும் கிழக்கு மாகாணசபையை வெற்றி கொள்வது ஐ.தே.க.வுக்கு கட்டாய தேவையாகும். ஐக்கிய தேசிய கட்சியின் வெற்றியை உறுதி செய்துகொள்வதற்கு கட்சியின் முழு சக்தியையும் பிரயோகித்து பிரசார நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

எவ்வாறாயினும் கிழக்கு தேர்தல் வெற்றியின் மீது ஆதிக்கம் செலுத்தும் முக்கிய காரணிகள் மூன்றை இனங்காண முடிகின்றது. முதலாவது இனவிகிதாசாரம், இரண்டாவது சமாதானம், ஜனநாயகம். மூன்றாவது பிரதேச அபிவிருத்தி வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு, பொருட்களின் விலை ஏற்றம், பொருளாதார முகாமைத்துவம் போன்றவை கிழக்கில் இன விகிதாசாரத்தின் அடிப்படையில் பார்க்கும்போது தமிழ் மக்களின் கணிசமான ஆதரவினை கடந்தகால தேர்தல்களில் ஐ.தே.க.வே பெற்று வந்த மட்டக்களப்பில் நடைபெற்ற உள்ளூராட்சிமன்ற தேர்தலில் ஐ.தே.க. போட்டியிடவில்லை. அதனால் பிள்ளையான் குழுவுக்கு தமிழ் வாக்குகள் பெறக்கூடியதாக அமைந்தது. பிள்ளையான் குழு உள்ளூராட்சிமன்ற தேர்தலில் பெற்ற வாக்குகளை மாகாணசபையிலும் பெறும் என்பதற்கு உத்தரவாதமில்லை.

வடக்கில் அரசு மேற்கொள்ளும் யுத்தத்தையும் தமிழ் மக்கள் கவனத்தில் எடுத்துக்கொள்ளாமலில்லை. முஸ்லிம் வாக்குகளும் மூன்று மாவட்டங்களிலும் பிரிந்து அளிக்கப்படக்கூடிய நிலை இருந்தாலும் இதில் பெரும்பான்மை அரசுக்கு எதிராகவே பணிக்கப்படக்கூடிய நிலை காணப்படுகிறது. இதற்கு ஒரு காரணம் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர்கள் தேர்தல் களத்தில் குதித்துள்ளமை, முஸ்லிம் முதலமைச்சர் ஒருவரை பெறவேண்டியதன் முக்கியத்துவம் என்பன பிரதான காரணிகளாக அமையும்.

கிழக்கை புலிகளிடமிருந்து மீட்டதையும் அங்கு சமாதானம் ஜனநாயகத்தை நிலைநாட்டியமையும் பொதுவாக எடுத்துக்கொண்டால் நாடு பூராகவும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு பெரும் ஆதரவை பெறுகின்ற காரணியாக அமைகின்றன. இந்நிலை கிழக்கு மக்கள் மத்தியில் எவ்வாறான தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை மதிப்பிட முடியாது. இந்த மீட்பு யுத்தம் தமிழ் மக்களுக்கு எதிராக அரசாங்கம் மேற்கொள்ளும் நடவடிக்கை என நினைக்கும் தமிழர்களும் இருக்கின்றனர். இவர்களின் அளவு பெரியதா, சிறியதா? என்பது இத்தேர்தலின் மூலம் தெரியவரும். எவ்வாறாயினும் மக்கள் இயல்பு வாழ்க்கையை விரும்புகின்றனர். இங்கு நிலையான சமாதானம், ஜனநாயகம் நிலைக்க வேண்டுமென நினைக்கும் மக்களே அதிகம்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேர்தல் பிரசாரத்தில் சமாதானம், ஜனநாயகத்தை தமது அரசு கிழக்கில் நிலைநாட்டியுள்ளது என பிரசாரம் செய்கின்றது. இதை மக்கள் எவ்வாறு ஏற்றுக்கொள்கின்றனர் என்பதை பொறுத்தே ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வெற்றி தங்கியுள்ளது.

ஆயுத கலாசாரத்துக்கு பல வருடங்களாக அடிமைப்படுத்தப்பட்ட மக்களை விடுவித்து மீண்டுமோர் ஆயுதம் ஏந்தும் குழுவுக்கு கட்சிப் பொறுப்பை ஒப்படைக்க அரசு முயல்கின்றது என ஐக்கிய தேசிய கட்சி குற்றம் சாட்டுகிறது. கிழக்கு மக்கள் எவ்வாறான சமாதானத்தை, ஜனநாயகத்தை அனுபவிக்கின்றனர் என்பதை பொறுத்தே தேர்தல் முடிவுகள் அமையும்.

கிழக்கின் உதயம் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேர்தல் மேடைகளில் கேட்கக்கூடியதாக இருக்கின்றது. இப்பகுதியில் வேகமாக அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்த அபிவிருத்திப் பணிகளைத் தொடர்ந்து முன்னெடுப்பதற்கு கிழக்கின் நிர்வாகத்தை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியிடம் ஒப்படைக்குமாறு கோருகின்றனர். வெளிப்பார்வைக்கு அரசுக்கு சாதகமான நிலையை தோற்றுவித்தாலும் இனவிகிதாசாரம், சமாதானம், ஜனநாயகம், மனித உரிமை மீறல்கள், பொருட்களின் விலை ஏற்றம், காணி அபகரிப்பு போன்ற விடயங்கள் நேரடியாக தாக்கத்தை ஏற்படுத்தும். வாக்குகளை அளிப்பது அபிவிருத்திக்கா அல்லது வேறு காரணங்களுக்காகவா என்பது தேர்தல் முடிவுகள் மூலம் தெரியவரும்.

**ஸியோனிஸ அரச பயங்கரவாதம் தொடர்ந்தால் உலக சமாதானத்துக்கு ஊறு நேரிடும்**
**ஐ.நா. செயலாளருக்கு ஈரான் கடிதம்**

காஸா பகுதியில் அன்றாடம் இஸ்ரேல் நடாத்திவரும் அடாவடித்தனத்தையிட்டு ஐ.நா.

மௌனம் சாதித்து வருவதையிட்டு வருத்தம் தெரிவித்து ஈரானின் வெளிவிவகார அமைச்சர் மனேஷர் முத்தக்கி, ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கி மூனுக்கு கடிதம் எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில் அவர், ஸயனிஸ ஆக்கிரமிப்பு சக்தியினால் கடந்த பல வாரங்களாக காஸாவில் இழைக்கப்பட்டுவரும் அடாவடித்தனமும் மனித இனத்துக்கு எதிரான செயற்பாடுகளும் அதிகரித்துள்ளன. நூற்றுக்கணக்கான அப்பாவி உயிர்கள் பறிக்கப்பட்டுள்ளன. இது சம்பந்தமாக ஐ.நா. கடைபிடித்துவரும் மௌனம் ஸயனிஸ ஆக்கிரமிப்பாளனுக்கு உற்சாகத்தை வழங்கியுள்ளது.

ஐ.நா. தீர்மானங்களை மதியாது உதாசீனம் செய்யும் ஸயனிஸ நாடு தொடர்ந்தும் ஐ.நா.வில் அங்கம் வகிக்க அனுமதிக்கப்பட்டிருப்பது விந்தையாகும்.

ஐ.நா. சபையின் நிபந்தனைக்குட்பட்ட அங்கத்துவ அந்தஸ்தைக்கொண்ட ஒன்றான இந்த ஸயனிஸ நாடு விதிக்கப்பட்ட எந்த நிபந்தனையையும் நிரைவேற்றவில்லை என்பது வெளிப்படையான உண்மையாகும்.

இந்த ஸயனிஸ நாட்டின் அரச பயங்கரவாதம் தொடர்வதற்கு அனுமதிக்கப்பட்டால் பிராந்திய சமாதானம் மட்டுமல்லாது உலக சமாதானத்துக்கும் ஊறு நேரும் என்பதை மறத்தலாகாது என்றும் அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## ஓர் அபாய அறிவிப்பு :
## 3 மாதங்களில் 2500 பேருக்கு டெங்கு!
## எட்டு பேர் மரணம்!

**(ஏ.எல்.எம். சத்தார்)**

பொதுவாக மழைக்காலங்களிலேயே டெங்கு நோய் பரவும் அபாயம் காணப்படுகின்றது. அதனால் இலங்கையில் தென் மேல், வடமேல் பருவப்பெயர்ச்சிக் காற்று வீசும் காலங்களை அண்டிய மே— ஜூன், நவம்பர் — டிசம்பர் ஆகிய காலப்பகுதிகளிலேயே டெங்கு பரவுவது உக்கிரமடைகிறது. ஆனால் இந்த வருடம் ஆரம்ப பருவத்திலேயே இந்நோய் தலை தூக்கி வருவதைக் காணமுடிகிறது. கடந்த மூன்று மாதங்களில் சுமார் 2500 பேர்கள் அளவில் பாதிப்புக்குள்ளாகி எட்டு மரணங்கள் கூட சம்பவித்திருக்கின்றன என்று ஓர் அபாய அறிவிப்பை சுகாதார அமைச்சைச் சேர்ந்த தொற்று நோய் தடுப்புப்பிரிவு வைத்திய நிபுணர் டாக்டர் தேவிக்கா மெண்டிஸ் வெளியிட்டார்.

ஏப்ரல் 28 முதல் மே 3ம் திகதி வரை அனுஷ்டிக்கப்படவிருக்கும் தேசிய டெங்கு நிவாரண வாரத்தினை முன்னிட்டு சுகாதார கல்விப் பணிமனை ஊடகவியலாளர்களுக்கு விளக்கமளிக்கும் பொருட்டு எற்பாடு செய்த கருத்தரங்கில் விஷேட உரை நிகழ்த்தும்போதே அவர் மேற்கண்ட கருத்தை வெளியிட்டார்.

பணிமனைப் பணிப்பாளர் டாக்டர் சரத் அமுனுகம தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் டாக்டர் தேவிகா தொடர்ந்து கூறியதாவது:—

காலநிலையில் ஏற்பட்டு வரும் மாறுதல் காரணமாகவே நாம் எதிர்பார்க்கும் காலத்திற்கு முன்னோடியாகவே டெங்கு நோய் அதிகரிக்க ஆரம்பித்திருக்கிறது. கடந்த மூன்று மாதங்களாக இடைவிட்டு விட்டு பெய்யும் மழையே டெங்கு நுளம்புகள் பல்கிப்பெருக வழி செய்திருக்கின்றன. எனவே நுளம்புகள் பரவுவதை பாடசாலைகள், காரியாலயங்கள், ஊராட்சி மன்றங்கள் என்று பலதரப்பட்டவர்களும் ஒத்துழைப்பு வழங்குவதன் மூலம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியும்.

டெங்கு நோயைப் பரப்பும் நுளம்புகளின் வாழ்க்கை வட்டம் சுமார் ஏழு நாட்கள் என்பதால் நுளம்புகளின் வாழ்விடங்களை சுத்தம் செய்வதற்காக ஒவ்வொருவரும் குறைந்தது வாரம் ஒரு முறையேனும் செயற்படுவது அவசியம் என்றார்.

டெங்கு ஒழிப்பு பிரிவு அதிகாரியான டாக்டர் லக்ஷ்மி த சில்வா கூறியதாவது:—

கடந்த ஒரு தசாப்த கால ஆய்வுகளின்படி 2004 ஆம் ஆண்டு எமது நாட்டில் டெங்கு நோய் மிகவும் உக்கிர நிலையில் காணப்பட்டது. சுமார் 15 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டு 88 மரணங்கள் நிகழ்ந்துள்ளன. சுகாதாரப் பகுதியால் மேற்கொள்ளப்பட்ட டெங்கு ஒழிப்பு நடவடிக்கையால் தொடர்ந்து குறைவடைந்த போதிலும் ஒரு வருடம் தாழ்ந்தும் அடுத்த வருடம் மேலுயர்ந்தும் வருவதைப் புள்ளிவிபரங்கள் காட்டுகின்றன. எனவே கடந்த 2007ஆம் ஆண்டு 28 மரணங்கள் சம்பவித்திருக்கின்றன. எனவே இந்த வருடம் அதிகரிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகின்ற போதிலும் மூன்று மாதங்களில் எட்டு மரணங்கள் ஏற்பட்டிருப்பது எமக்கு ஒரு சவாலாகும். இந்த அபாயத்திலிருந்து காப்பாற்றிக்கொள்ள சுகாதாரப்பகுதியால் மாத்திரம் முடியாது. ஒவ்வொருவரும் தம் வீட்டையும் சூழலையும் சுத்தமாக வைத்திருக்க முன்வருவதன் மூலம் டெங்கு மாத்திரமல்ல, நுளம்புகளினால்

பரவும் எல்லா நோய்களிலிருந்தும் பாதுகாத்துக் கொள்ளலாம்.

சுகாதார அமைச்சின் பணிப்பாளர் டாக்டர் மஹிபால, தொற்று நோய்க்கான நிபுணர் டாக்டர் நிஹால் அபேசிங்க, டாக்டர் சாந்த ஹெட்டி ஆரச்சி போன்றோரும் கருத்துக்கள் வழங்கினர்.

பணிமனை ஊடக அதிகாரி புத்ததாஸ ஜயவர்த்தன நிகழ்ச்சிகளை நெறிப்படுத்தினார்.

**சமயக் கல்வி இல்லாமையாலேயே முதியோர் இல்லங்களில் தம் பெற்றோரைச் சேர்த்திருக்கிறார்கள் அமைச்சர் பண்டு பண்டாரநாயக கவலை**

''சமயக் கல்விக்கு முக்கியத்துவம் செலுத்தப்பட வேண்டும். பாடசாலைக்கு வரக்கூடிய மாணவர்களை அஹதியா வகுப்புகளுக்குக் கட்டாயம் வருமாறு கூறுவது அந்தப் பாடசாலைகளின் அதிபர்களின் கடமையாகும். அதிபர்கள், பெற்றோர்கள் தத்தமது மாணவச் செல்வங்களை அஹதியா சமய வகுப்புகளுக்கு அனுப்புவதற்குக் கூடிய கவனம் செலுத்த வேண்டும்''.

இவ்வாறு கலாசார அமைச்சர் பண்டு பண்டாரநாயக களுத்துறை மாவட்ட அஹதியா ஆசிரியர்களுக்கான இலவச சீருடை வழங்கும் வைபவத்தில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும்போது கூறினார்.

பாணந்துறை ஹேனமுல்லை ஜீலான் நவோதய கல்லூரி உம்முல் மலீஹா மண்டபத்தில் களுத்துறை மாவட்ட அஹதியா தலைவர் அல்ஹாஜ் எம்.எச்.எம். உவைன் ஜே.பி. தலைமையில் இவ்வைபவம் நடைபெற்றது.

முஸ்லிம் சமய கலாசாரத் திணைக்களத்தினால் அஹதியா ஆசிரியர்களுக்கான சீருடை வழங்கும் இந்த வைபவத்தில் தொடந்தும் உரையாற்றிய கலாசார அமைச்சர் பண்டு பண்டாரநாயக, ''முதியோர் இல்லங்களில் தமது பெற்றோர்களைச் சேர்த்து இருப்பவர்கள் நன்கு படித்து உயர்பதவிகளில் இருப்பவர்களே! அவர்கள் சமய அடிப்படையில் படித்து உயர் பதவிகளைப் பெற்றிருந்தால் அப்படி நடக்க மாட்டார்கள். மதுவுக்கும் போதைப்பொருட்களுக்கும் அடிமைகளாகி நாட்டுக்கு எவ்விதமான பிரயோசனமுமில்லாமல் இளமையிலே மரணத்தைத் தழுவுபவர்களும் அறநெறிப் பாடசாலைகள் செல்லாதவர்களே! அஹதியாவின் பணிகள் விரிவுபடுத்தப்பட வேண்டும். மாணவர்களின் திறமைகளை வளர்த்து நாட்டுக்குகந்த நற்பிரஜைகளாக பிள்ளைகளை உருவாக்கும் அஹதியாவின் சேவை பாராட்டத்தக்கதேயாகும் என்று கூறினார்.

இவ்விழாவில் முஸ்லிம் சமய கலாசார திணைக்களப் பணிப்பாளர் அஷ்ஷெய்க் எம்.ஐ. அமீர், ஜாமியா நளீமிய்யா கலாபீட உதவி பணிப்பாளர் அஷ்ஷெய்க் ஏ.ஸீ. அகார் முஹம்மத், அஹதியா தேசிய ஒருங்கிணைப்பாளர் தேசகீர்த்தி அல்ஹாஜ் ஏ.எல்.எம். அஸ்வர், ஆசிரிய ஆலாசகர் மௌலவி இக்பால், அஹதியா மத்திய சம்மேளனப் பரீட்சைக்குழு அல்ஹாஜ் எம்.எச்.எம். லாபிர் ஆகியோரும் உரை நிகழ்த்தினர்.

களுத்துறை மாவட்ட அஹதியா ஆசிரியர்களுக்கான முழுநாள் செயலமர்வின் பின் இறுதியில் சகலோருக்கும் முஸ்லிம் சமயத் திணைக்களத்தினால் இலவசமாக சீருடைகள் வழங்கப்பட்டன.

மாவட்ட செயலாளர் எம்.எஸ்.எம். சல்மான் ஆசிரியர் நன்றியுரை வழைங்கினார்.

**(முல்லையூர் அஸ்வர்)**

## புத்தளத்தின் நான்கு பிரதேச அபிவிருத்திக்கு 77.8 மில்லியன் ரூபா நிதி

ரூபாய் 77.8 மில்லியன் நிதி ஒதுக்கீட்டில் புத்தளத்தின் நான்கு பிரதேச செயலகப் பிரிவுகளில் அபிவிருத்திகள் மிக விரைவில் ஆரம்பிக்கப்படும் என கால்நடை வள அபிவிருத்தி பிரதியமைச்சரும் அபிவிருத்தி குழு தலைவருமான கே.ஏ. பாயிஸ் தெரிவித்தார்.

புத்தளம், முந்தல், வண்ணாத்திவில்லு, கல்பிட்டி ஆகிய பிரதேச செயலகங்களைச் சேர்ந்த 101 கிராம அலுவலர் பிரிவுகளில் இந்த அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் பிரதியமைச்சர் கே.ஏ. பாயிஸ் அபிவிருத்திக் குழுத் தலைவராக நியமிக்கப்பட்டதையடுத்தே இந்த துரித அபிவிருத்திப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

## கிடிக்கு மாகாண சபைத் சூதர்தலும் முஊலிம்களும்

எதிர்வரும் மே மாதம் 10ம் திகதி நடைபெறப் போகும் கிழக்கு மாகாண சபைத் தேர்தலானது பல வழிகளிலும் முக்கியத்துவம் பெறுகின்றது. அதிலும் குறிப்பாக முஸ்லிம் சமூகம் எடுக்கப்போகும் முடிவானது அவர்களது தலைவிதியை நிர்ணயிக்கப் போகும் ஒன்றாகும்.

கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரை முஸ்லிம்களும் தமிழர்களும் ஓரளவு சிறு விகிதாசார வித்தியாசத்துடன் சம பலத்துடன் உள்ளார்கள்.

இந்நிலையில் ஆட்சி அமைக்கப் போவது யார்? என்பது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த கேள்வியாகும்.

கிழக்கிலே பெரும்பான்மையாக வாழும் தமிழர்களும் முஸ்லிம்களும் தத்தமது தனித்துவங்களை இழந்து இரு பெரும் பேரினவாதக் கட்சிகளின் சின்னத்தின் கீழேயே போட்டியிடுகின்றனர்.

தமிழர் தரப்பைப் பொறுத்தவரையில் விடுதலைப் புலிகளின் ஆதிக்கம் இல்லாத நிலையில், தமிழ் தேசியக் கூட்டமைப்பு தேர்தலை பகிஷ்கரித்து இருக்கும் இத்தருணத்தில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் என்ற கருணா — பிள்ளையான் அணியினர் மட்டுமே பிரதான கட்சியாக களத்தில் உள்ளனர். இந்நிலையில் கிழக்கு தமிழ் மக்களில் கணிசமானோர் இத்தேர்தலில் பங்குகொள்வார்களாக இருந்தால் பெரும்பான்மையான தமிழ் வாக்குகள் சிதறுவதற்கு வாய்ப்பு இல்லை.

முன்னாள் விடுதலைப் புலிகளான கருணா — பிள்ளையான் அணியினர் கிழக்கு மாகாணத்தைக் கைப்பற்றி ஆட்சியைப் பிடிக்க வேண்டும் என்ற முனைப்போடு உள்ளனர்.

உண்மையில் விடுதலைப் புலிகள் கிழக்கில் பலம் இழந்தமைக்கும் அரசு மிகவும் விரைவாக கிழக்கை கைப்பற்றியதற்கும் கருணா — பிள்ளையான் அணியின் பிளவு மிகமுக்கிய காரணி எனலாம்.

இலங்கை இந்திய ஒப்பந்தப்படி வடக்கோடு இணைந்து இருந்த கிழக்கை உயர்நீதிமன்ற தீர்ப்பின் மூலம் பிரிக்கப்பட்டது. இணைக்கப்பட்ட கிழக்கு தனியாக பிரிக்கப்படுவதற்கு ஜே.வி.பி.யும் தேசிய காங்கிரஸின் தலைவர் அமைச்சர் ஏ.எல்.எம். அதாவுல்லாவும் பிரதான பாத்திரம் வகித்தவர்கள் ஆகும்.

அரசியல் ரீதியாக பார்க்கப் போனால் வடக்கில் இருந்து கிழக்கு பிரிக்கப்பட்டது தமிழர் தாயக கோட்பாட்டிற்கு விழுந்த பலத்த அடியாகும். இந்நிலையில் வடக்கும் கிழக்கும் இணைந்து இருந்தால்தான் அது தமிழ் மக்களின் அரசியல், பொருளாதார அதிகார பலத்திற்கு சாதகமாக இருக்கும்.

தமிழ் மக்கள் வடகிழக்கிலே தங்களைத் தாங்களே ஆள நினைக்கின்றனர். இந்நிலையில் கிழக்கு பிரிக்கப்பட்டு நடாத்தப்படும் தேர்தலில் தமிழர் ஒருவர் முதலமைச்சராக வராவிட்டால் நிலைமை எவ்வாறு இருக்கும்?

உண்மையில் அரசாங்கத்தைப் பொறுத்தவரையிலும் சிங்கள பேரினவாதத்தைப் பொறுத்தவரையிலும் ஒரு சிறந்த காய் நகர்த்தலாக பிள்ளையானை முதலமைச்சராக்கவே விரும்புவர்.

ஏனெனில் மிகவும் இலகுவாக கிழக்கு விடுவிக்கப்பட்டமைக்கு கருணா — பிள்ளையான் அணியின் ஒத்துழைப்பு படைகளுக்கு மிகவும் உதவியாக இருந்தது.

இந்நிலையில் நடைபெறும் கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் தமிழர் ஒருவர் முதலமைச்சராக வரவில்லையென்றால் அது விடுதலைப் புலிகளின் பிரசாரத்திற்கு வாய்ப்பாக அமைந்துவிடும்.

வடக்கோடு கிழக்கு இணைக்கப்பட்டு இருக்க வேண்டும். இல்லையென்றால் கிழக்கிலே தமிழர்கள் சிறுபான்மையாக்கப்பட்டு விடுவார்கள். தமிழர் ஒருவர் முதலமைச்சராக வரவில்லை என்றால் கிழக்கில் உள்ள தமிழ் இளைஞர்கள் மீண்டும் விடுதலைப் புலிகள் இயக்கத்தில் சேர்வதற்கும் விடுதலைப் புலிகள் இயக்கம் பலம்பெறுவதற்கும் அது காரணமாக அமைந்துவிடும் என்பது அரசிற்கு தெரியும்.

ஆகவே விடுவிக்கப்பட்ட கிழக்கை தொடர்ந்தும் தக்கவைத்து, ஸ்திரப்படுத்த வேண்டுமாக இருந்தால் முஸ்லிம் ஒருவரை முதலமைச்சராக ஆக்குவதைவிட பிள்ளையானை முதலமைச்சராக்குவதே சிறந்ததாக இருக்கும் என பேரினவாதிகள் கருதுகின்றார்கள்.

இந்திய அரசாங்கம் எவ்வாறு வடகிழக்கு மாகாண சபையில் ஒரு வரதராஜப்பெருமாளை முதலமைச்சராக்கி தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்து இருந்ததோ அதேபோல் கிழக்கிலே பிள்ளையானை முதலமைச்சராக்கி கிழக்கை தொடர்ந்தும் தனது பூரண கட்டுப்பாட்டிற்குள் வைத்து இருக்கவே அரசு விரும்புகின்றது.

இவ்வாறு பிள்ளையான் வெற்றி பெற்று கிழக்கின் முதலமைச்சராக ஆக்கப்பட்டால் கிழக்கு மாகாணத்தில் 03 மாவட்டங்களில் இருந்தும் தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக ஏழு, எட்டு பாராளுமன்ற பிரதிநிதிகளை ஆளும்கட்சி தனக்கு சாதகமாக எதிர்வரும் பாராளுமன்ற பொதுத் தேர்தலில் பெற்றுக்கொள்ளலாம் என்ற கணக்கைப் போட்டுள்ளது.

இந்த அரசியல் காய் நகர்த்தல்களும் வியூகங்களும் விளங்காமல் அரசாங்கத்துடன் இணைந்து இருக்கின்ற முஸ்லிம் அமைச்சர்கள் ஏதோ நாங்கள்தான் முஸ்லிம் முதலமைச்சரைப் பெறுவோம் என்று பேசிக்கொண்டிருக்கிறார்கள்.

கிழக்கு முஸ்லிம்களின் பெரும்பான்மை ஆதரவை பெற்ற முஸ்லிம் காங்கிரஸானது தனித்து போட்டியிடுவதைவிட அதிகாரத்தை கைப்பற்ற வேண்டுமாக இருந்தால் ஐக்கிய தேசியக் கட்சியுடன் கூட்டுச் சேர்ந்தால்தான் வெற்றி பெற முடியும் என நினைத்து யானைச் சின்னத்தின் கீழ் வந்து தனது தேர்தல் வியூகத்தை வகுத்துள்ளது.

அதேபோல் கிழக்கை தனது கட்டுப்பாட்டிற்குள் வைத்து இருக்க வேண்டுமாக இருந்தால் கருணா — பிள்ளையான் அணியினரின் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் என்ற கட்சி தமக்கு தேவை என்றும் அதேபோல் இத்தேர்தலில் அரச பலத்தை நம்பியிருக்கும் பிள்ளையானும் வெற்றி பெற வேண்டுமாக இருந்தால் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டணியின் வெற்றிலைச் சின்னத்தின் கீழேயே போட்டியிட வேண்டும் என்று கருதி வியூகம் அமைத்து உள்ளனர்.

இந்நிலையில் உண்மையில் போட்டி மிகவும் பலமாகவே இருக்கப் போகின்றது. எவருமே அறுதிப்பெரும்பான்மை பலத்தைப் பெற முடியாது. வெற்றி பெறும் அணி இரண்டு அல்லது மூன்று உறுப்பினர் வித்தியாசத்திலேயே வெற்றி பெறும் வாய்ப்பு உள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டணியைப் பொறுத்தவரை தற்போது வெற்றி வாய்ப்பு அவ்வணிக்கே சற்று கூடுதலாக இருப்பதுபோல் தென்படுகின்றது.

ஏனெனில் அம்பாறை மாவட்டம், திருகோணமலை மாவட்டம் ஆகியவற்றில் உள்ள பெரும்பான்மையான சிங்கள மக்களின் வாக்குகள் வெற்றிலைச் சின்னத்திற்கே அளிக்கப்பட அதிகம் வாய்ப்புக்கள் உள்ளன. எல்லைப்புறத்தில் இருக்கும் இவ்விரு மாவட்டங்களில் உள்ள சிங்கள மக்களின் இன உணர்வும் யுத்த வெற்றியும் கிழக்கு பிரிக்கப்பட்டு படையினரால் கைப்பற்றப்பட்ட நிகழ்வையும் வைத்துப் பார்க்கும்போது சிங்கள மக்களில் கணிசமானோர் வெற்றிலைக்கே வாக்களிக்கலாம்.

அதேபோல் பிரதான போட்டிக்கு ஆளில்லாத நிலையில் இருக்கும் தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் அவர்களின் வாக்குகளில் பெரும்பான்மையானவை தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் கூட்டு அணியான வெற்றிலைச் சின்னத்திற்கு அளிக்கப்பட வாய்ப்பு உள்ளது.

இதேபோல் கிழக்கில் வாழும் முஸ்லிம் மக்களின் ஒரு குறிப்பிட்ட கணிசமான வாக்குகள் அரசாங்கத்தில் பதவியில் இருக்கும் அமைச்சர்கள் மூலமாக வெற்றிலைச் சின்னத்திற்கு அளிக்கப்பட வாய்ப்புக்கள் உள்ளன.

இந்நிலையில் பெரும்பான்மையான சிங்கள மக்களின் வாக்குகளும் பெரும்பான்மையான தமிழ் மக்களின் வாக்குகளும் ஒரு குறிப்பிட்ட கணிசமான அளவு முஸ்லிம் மக்களின் வாக்குகளும் வெற்றிலைச் சின்னத்திற்கு அளிக்கப்படும்போது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி போனஸ் ஆசனத்தையும் பெற்று ஆட்சி அமைக்கக்கூடிய வாய்ப்பு உள்ளது.

பிரதான முஸ்லிம் காங்கிரஸின் ஆதரவுடன் போட்டியிடும் ஐக்கிய தேசிய கட்சியின் வெற்றி வாய்ப்பு எவ்வாறு உள்ளது? என்பதை பார்ப்போம்.

அரசாங்கம் என்னதான் யுத்தவெற்றி, கிழக்கைப் பிடித்து விட்டோம் என்று மார்தட்டினாலும் திருகோணமலை, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் உள்ள சிங்கள மக்களின் அரைவாசி வாக்குகள் ஐக்கிய தேசியக் கட்சிக்குரிய நிலையான வாக்குகளாகவே உள்ளது.

தற்போது விலைவாசி உயர்வு, பொருளாதாரப் பிரச்சினைகள் போன்றவை மக்களின்

வாக்குகளை கூடுதலாகப் பெற ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாய்ப்பாக உள்ள காரணிகள்.

அத்தோடு வெற்றி வாய்ப்பில் தாக்கத்தை ஏற்படுத்தப் போகும் வாக்குகளாக தமிழ் மக்களின் வாக்குகள் அமையவுள்ளன. ஒரு கால்வாசிக்கு மேற்பட்ட தமிழ் மக்கள் ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாக்களிப்பார்களாக இருந்தால் அது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வெற்றி வாய்ப்பை பாதிக்கும்.

இந்நிலையில் முஸ்லிம் காங்கிரஸ் மிகவும் நுட்பமாக தனது காய் நகர்த்தலைச் செய்து இருக்கின்றது. தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் முஸ்லிம் காங்கிரஸ் சார்பான மரச்சின்னத்திற்கு வாக்களிப்பதைவிட யானைச் சின்னத்திற்கு வாக்களிப்பதில் அவர்களுக்கு எந்தவித தயக்கமும் இல்லை.

தமிழ் மக்களில் யானைக்கு வாக்களித்து பழக்கப்பட்டவர்கள் ஒரு கணிசமான தொகையினர் உள்ளார்கள். அதேபோல் முஸ்லிம்களிலும் உள்ளார்கள்.

புரிந்துணர்வு ஒப்பந்தம் மூலம் விடுதலைப் புலிகளுக்கு சர்வதேச அங்கீகாரத்தைப் பெற்றுக் கொடுத்தவர் ரணில் விக்கிரமசிங்க அவர்கள். அத்தோடு, இவ் ஒப்பந்தத்தின் மூலம் நாட்டில் யுத்தம் ஓய்ந்து, சமாதான சூழ்நிலை நிலவியதோடு இனப்பிரச்சினைக்கு நியாயமான அரசியல் தீர்வை தமிழ் மக்களுக்கு வழங்கக்கூடிய மனப்பான்மை படைத்தவராகவும் விளங்குகின்றனர். ரணிலும் அவரது ஐக்கிய தேசியக் கட்சியும் இந்நிலையில் தமது இயக்கத்தை விட்டு விலகி அரசின் கைக்கூலியாக செயல்படும் பிள்ளையானும் அவரது அணியினரும் முதலமைச்சராக வருவதையோ, கிழக்கில் அதிகாரத்தைப் பெறுவதையோ, அதன்மூலம் தமிழ் மக்களின் ஏக பிரதிநிதியாக செயல்படுவதையோ விடுதலைப் புலிகள் விரும்ப மாட்டார்கள்.

இவ்வாறான சூழ்நிலையில் கிழக்கு தமிழ் மக்களை யானைக்கு வாக்களிக்கும்படி அவர்கள் மறைமுகமாக கோருவார்களாக இருந்தால் நிச்சயமாக கணிசமான தமிழ் மக்கள் யானைக்கு வாக்களிக்கும்போது அரைவாசி தமிழ் மக்களின் வாக்குகளையும் ஐக்கிய தேசியக் கட்சி பெற்றுக்கொள்ளக்கூடிய வாய்ப்பு உள்ளது.

இனி, இத்தேர்தலில் முஸ்லிம் மக்களின் நிலையும் அவர்கள் எத்தகைய முடிவை எடுத்தால் அது தமக்கு சாதகமாக அமையும் என்பதைப் பற்றி இனி ஆராய்வோம்.

இரு பெரும் தேசியக் கட்சிகளின் தயவில் தொங்கிக்கொண்டு பல முஸ்லிம் வேட்பாளர்கள் களத்தில் குதித்து உள்ளார்கள்.

இதில் கணிசமான முஸ்லிம்களின் பிரதிநிதித்துவம் குறைய வாய்ப்பு உள்ளது. முஸ்லிம்கள் அளிக்கப்போகும் வாக்குகள் சிங்களப் பிரதிநிதியையும் தமிழ் பிரதிநிதியையும் தெரிவு செய்ய உதவப் போகின்றது.

எவ்வாறெனில் அம்பாறை மாவட்டத்திலும் திருகோணமலை மாவட்டத்திலும் பல முஸ்லிம் வேட்பாளர்கள் களம் இறங்கி உள்ளார்கள். இவர்களின் வாக்குகள் பல முஸ்லிம் வேட்பாளர்களுக்கும் பிரியும்போது ஒரு சில குறிப்பிட்ட வேட்பாளர்களை மாத்திரமே களம் இறக்கி அவர்களின் விருப்பு இலக்கத்திற்கு மாத்திரம் புள்ளடி இடுமாறு சிங்களவர்களும் தமிழர்களும் கோரும்போது அவர்களின் சார்பான பிரதிநிதிகளே மிகக் கூடுதலான விருப்பு வாக்குகளைப் பெற முடியும்.

சிங்கள, தமிழ் வேட்பாளர்களின் விருப்பு வாக்குகளுக்கு அடுத்ததாகவே முஸ்லிம் வேட்பாளர்களின் விருப்பு வாக்குகள் வர வாய்ப்பு உள்ளது. இந்நிலையில் முஸ்லிம் பிரதிநிதித்துவமானது மிகவும் குறைந்து விடவே செய்யும்.

மட்டக்களப்பு மாவட்டத்தைப் பொறுத்தவரையில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் போட்டியிடும் வேட்பாளர்களில் மூவர் முஸ்லிமாக உள்ளனர். 09 வேட்பாளர்களை தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் களம் இறக்கியுள்ளனர். அத்தோடு இம்மாவட்டத்தில் தமது அனைத்து வேட்பாளர்களும் வெற்றி பெறத் தக்கவகையில் அவர்கள் வியூகம் அமைத்துள்ளதாக அறிய முடிகின்றது.

கல்குடா, மட்டக்களப்பு, பட்டிருப்பு ஆகிய 03 தொகுதிகளை உள்ளடக்கியதே மட்டக்களப்பு மாவட்டம் ஆகும். ஒவ்வொரு தொகுதிக்கும் மூன்று, மூன்று வேட்பாளர்களாகப் பிரித்து அந்தந்த மூவருக்கு மட்டுமே அந்தந்த தொகுதியில் உள்ளவர்கள் வாக்களிக்க வேண்டும் என்ற ஒரு ஏற்பாட்டை செய்து 09 ஆசனம் கிடைக்கும்போது அத்தனையையும் தமதாக்கிக்கொள்ள சிறந்த வியூகத்தை வகுத்துள்ளார்கள் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள்.

வெற்றிலைச் சின்னத்திலே போட்டியிடும் முஸ்லிம் வேட்பாளர்களுக்கு ஒரு எடுகோளாக மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம்களின் வாக்குகள் அதிகூடியபட்சமாக ஒரு 30,000 கிடைக்கப் பெற்றாலும் அவர்களின் விருப்பு வாக்குகள் 30,000க்கு உட்பட்டதாகவே இருக்கும். ஆனால், 3 தொகுதிகளிலும் மிகப் பெரும்பான்மையான வாக்குகள் தமிழ் வாக்குகளே. எப்படியும் ஒவ்வொரு தமிழ் வேட்பாளரும் 40,000 — 50,000 விருப்பு வாக்குகளைப் பெற சாத்தியம் உள்ளது.

மட்டக்களப்பில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் போட்டியிடும் முஸ்லிம் வேட்பாளர்களில் ஓரளவு பரவலாக விருப்பு வாக்குகளை பெறக்கூடியவராக உள்ளவர் முன்னாள் பிரதியமைச்சர் ஹிஸ்புல்லாஹ் மாத்திரமே. எனினும் மேற்படி நிலையில் விருப்பு வாக்குகள் அளிக்கப்படுமாக இருந்தால் ஹிஸ்புல்லாஹ் வெற்றி பெறுவதுகூட கேள்விக்குறியாகவே மாறிவிடும்.

இந்நிலையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் இருந்து முஸ்லிம் வேட்பாளர்கள் எவரும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் இருந்து தெரிவு செய்யப்படாத நிலை ஏற்படும்போது அக்கட்சிக்கு முஸ்லிம்களால் அளிக்கப்படும் வாக்குகள் தமிழ் பிரதிநிதிகளைத் தெரிவு செய்யவே வழிவகுக்கும்.

அண்மையில் நடந்த உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் ஏறாவூர்ப்பற்று முஸ்லிம் மக்கள் வெற்றிலைக்கு வாக்களித்து சிங்களப் பிரதிநிதியை தெரிவு செய்து உள்ளார்கள் என்பதை கருத்தில் கொள்க.

ஆயினும் ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் போட்டியிடும் முன்னாள் பிரதியமைச்சர் பஷீர் சேகுதாவூத் இம்முறை கூடுதலான விருப்பு வாக்குகளைப் பெற்று மக்களால் தெரிவு செய்யப்படும் பிரதிநிதியாக தெரிவு செய்யப்பட வாய்ப்பு உள்ளது. அவரோடு சேர்த்து இன்னும் இரண்டு, மூன்று முஸ்லிம் பிரதிநிதிகள் வெற்றி பெற வாய்ப்பு உள்ளது.

இத்தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தை பிள்ளையான் தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பே கைப்பற்ற வாய்ப்பாக உள்ளது.

அம்பாறை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் அக்கரைப்பற்று தவிர்ந்த ஏனைய முஸ்லிம் பகுதிகளில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு குறிப்பிடும்படியான செல்வாக்கு தென்படவில்லை.

இந்நிலையில் ஐக்கிய தேசியக் கட்சியினர் இம்மாவட்டத்தில் கூடுதலான ஆசனங்களைப் பெற்று வெற்றி பெறும் வாய்ப்பு உள்ளது.

அம்பாறை மாவட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியும் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியும் வெற்றி பெற திருகோணமலை மாவட்ட முடிவே வெற்றி வாய்ப்பை தீர்மானிக்கப் போகின்றது.

திருகோணமலை மாவட்ட தமிழ் மக்கள் பிள்ளையான் முதலமைச்சராக வரக்கூடாது என்ற விடுதலைப் புலிகளின் மறைமுக 'சிக்னலுக்கு' ஏற்ப செயல்படுவார்களாக இருந்தால் ஐக்கிய தேசியக் கட்சி கூடுதலான வாக்குகள் பெற வாய்ப்பு உள்ளது.

புலிகளின் தலைவர் பிரபாகரனின் முடிவு எப்படி மஹிந்த ராஜபக்ஷவை ஜனாதிபதியாக்கியதோ அதேபோல் ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாக்களிக்கும்படி மறைமுக ஆதரவை விடுதலைப் புலிகள் வழங்குவார்களாக இருந்தால் கிழக்கு மாகாணசபையை ஐக்கிய தேசியக் கட்சி கைப்பற்றவே சாத்தியம் உள்ளது.

முஸ்லிம்களின் அரசியல் பலம் என்பது கிழக்கிலேதான் உள்ளது. இந்த அரசியல் பலத்தைக்கொண்டே இனப்பிரச்சினைத் தீர்விற்கான பேச்சுவார்த்தை மேசையில் முஸ்லிம்களையும் ஒரு தரப்பாக சேர்த்துக்கொள்ள வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இந்நிலையில் கிழக்கு முஸ்லிம்கள் தமது உரிமைகளையும் அபிலாஷைகளையும் வென்றெடுக்க வேண்டுமாக இருந்தால் அனைத்தையும் மறந்து 1988ம் ஆண்டு நடைபெற்ற மாகாணசபைத் தேர்தலில் எவ்வாறு ஒன்றுபட்டார்களோ, அவ்வாறே இத்தேர்தலிலும் ஒன்றுபடுவார்களாக இருந்தால் முஸ்லிம்களின் அரசியல் பலம் நிரூபிக்கப்படுவதோடு அவர்களது காணிப்பிரச்சினை, மீள்குடியேற்றம் போன்ற பல்வேறுபட்ட முக்கிய பிரச்சினைகளுக்கு சிறந்த தீர்வைக் காண்பதோடு எதிர்காலத்தில் நடைபெறப் போகும் இனப்பிரச்சினைத் தீர்வு அரசியல் பேச்சுவார்த்தை மேசையிலும் முஸ்லிம்களை புறக்கணிக்க முடியாத ஒரு தரப்பாக முஸ்லிம் தரப்பு பலம்பெற்று விடும்.

## இத்தேர்தல் சிறுபான்மை இனத்தவர்களுக்கு ஜனாதிபதி தேர்தல் போன்றதே

**- மு.கா. தலைவர் ஹக்கீம்**

**(காஸிம் அஸ்வர்)**

தற்போது நடைபெறவுள்ள கிழக்கு மாகாணசபைத் தேர்தலிலே ஐக்கிய தேசிய கட்சியின் தலைமை வேட்பாளராக போட்டியிடவுள்ள நான் இச்சந்தர்ப்பத்தில் திருகோணமலை ஊடகவியலாளர்களை ஒன்றாக சந்தித்திருக்கிறேன். இந்த தேர்தலை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கிழக்கிலே வாழும் தமிழ் பேசும் சமூகத்தின் ஜனாதிபதிக்கான தேர்தலாகக் கணிக்கின்றது. அதேசமயம் ஐ.தே.க. பாராளுமன்ற தேர்தலாகக் கணிக்கின்றது. ஐ.ம.சு. முன்னணி மட்டுமே மாகாணசபை தேர்தலாக கணிக்கின்றது என்று ஸ்ரீ.ல.மு.கா.ஸின் தேசியத் தலைவரும் மேற்படி தேர்தலில் திருமலை மாவட்டத்தின் ஐ.தே.க.வின் முதன்மை வேட்பாளருமான ரவூப் ஹக்கீம், கூறினார்.

கடந்த 20.04.08 திருமலை ஓசின் விடுதியில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் அவ்வாறு கூறினார். தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில், கூறியதாவது:

அரச பயங்கரவாதத்தையும் அரசாங்கத்தின் அட்டூழியத்தையும் இல்லாமல் ஒழித்து சகவாழ்வையும் ஒற்றுமையையும் கொண்டு வருவதற்கு ஐ.தே.கட்சியுடன் மு.கா. கூட்டணி அமைத்துள்ளது.

இன்று கிழக்கின் உதயம் என்ற போர்வையில் கிழக்கின் அபிவிருத்தி என்ற ஒரு நாடகத்தை அரசாங்கம் அரங்கேற்றி இருக்கின்றது. பல வருடங்களாக நிதி நிறுவனங்கள் இனப்பிரச்சினையாலும் யுத்தத்தினாலும் பாதிப்புற்ற மக்களுக்கு கொடுத்தவற்றை கிழக்கின் உதயம் என்று செலவழிக்கின்றார்கள். போதாக்குறைக்கு சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரத்தியேக நிபந்தனைகளுடன் கொடுத்த நிதிகளைத்தான் செலவு செய்கின்றனர். இந்த அரசு தங்களின் பெரும்பான்மையை தக்கவைத்துக்கொள்ள எல்லா கட்சிகளிலும் உள்ளவர்களை உடைத்து காவுகொள்கின்றது. இந்த தேர்தலிலே மு.கா. தலைவர் மரத்தில் கேட்க உடன்படவில்லையென மரத்துக்கு துரோகம் இழைத்தவர்கள் இன்று முதலைக் கண்ணீர் வடிக்கின்றனர்.

முதலமைச்சருக்கு மட்டுமான தேர்தல் இது அல்ல என நான் கூறியவற்றை அடிவருடிகள் இன்று அப்படியே கதையை மாற்றி மக்களை குழப்ப முனைகின்றனர். முஸ்லிம் காங்கிரஸின் ஆதரவாளர்கள், அபிமானிகள் இவர்களின் வார்த்தைக்கு சோரம் போக மாட்டார்கள் என்றார்.

கடந்த திங்கட்கிழமை 21.04.08 ஜமாலியா பிரதேசத்தில் ஆசிரியர் மௌசும் தலைமையில் காரியாலயம் திறப்பும் பொதுக்கூட்டமும் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து சோனகவாடி பிரதேசத்தில் காரியாலயம் திறப்பு விழாவும் மக்களுக்கு விளக்கம் அளிக்கும் கூட்டமும் மு.கா. சோனகவாடி அமைப்பாளர் எஸ். சனூான் தலைமையில் நடைபெற்றது. இரண்டிலும் தலைவர் ரவூப் ஹக்கீம் கலந்துகொண்டார்.

## கிழக்கு முஸ்லிம்களின் எதிர்காலம் மாகாணசபை தேர்தலிலேயே தங்கியுள்ளது

**- கிண்ணியாவில் அமைச்சர் றிஷாட்**

கிழக்குமாகாண சபைத் தேர்தல் என்பது இந்தப் பிரதேசத்திலே வாழுகின்ற முஸ்லிம்களுக்கு மிகவும் முக்கியமான தேர்தலாகும். இந்த தேர்தலை ஏனைய தேர்தல்களைப் போன்று முஸ்லிம்கள் ஏனோதானோ என்று அலட்சியம் செய்துவிடக்கூடாது. இப்பிரதேசத்திலே வாழுகின்ற முஸ்லிம்களின் எதிர்காலம், பாதுகாப்பு அபிவிருத்தி என்பன இந்தத் தேர்தலிலே தங்கியுள்ளது என்பதால் முஸ்லிம்கள் அனைவரும் ஒன்றுபட்டு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சின்னமான வெற்றிலைச் சின்னத்திற்கு தமது வாக்குகளை அளிக்க வேண்டுமென மீள்குடியேற்றம் மற்றும் அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சர் றிஷாட் பதியுதீன் கிண்ணியாவில் நடைபெற்ற பிரசார கூட்டமொன்றில் உரையாற்றும்போது தெரிவித்தார்.

இங்கு அமைச்சர் றிஷாத் பதியுதீன் மேலும் உரையாற்றுகையில் இந்த தேர்தல்

முஸ்லிம்களைப் பொறுத்த வரையில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. முஸ்லிம்கள் பிரிந்து நின்று வாக்களித்தாலும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியே வெற்றிபெறும். முஸ்லிம்களாகிய நாம் நமது சமூகத்தைச் சேர்ந்த ஒரு முதலமைச்சரை பெறமுடியாமல் போகும்.

அப்படியானால் எதிர்வரும் ஐந்து வருட காலமும் நாம் துன்பம் துயரம் நிறைந்த அவல வாழ்க்கையே வாழ நேரிடும். நாம் சிந்தித்து ஒற்றுமைப்பட்டு முஸ்லிம் பிரதிநிதித்துவத்தை அதிகரித்துக்கொண்டால் எமது முஸ்லிம் சகோதரர் ஒருவரே முதலமைச்சராக வருவார்.

கிழக்கு மாகாணத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியே வெற்றி பெறும் என்பது உறுதியாகி விட்டது. முஸ்லிம்களைப் பொறுத்தவரையில் ஒன்றுபட்டு வாக்களித்து முஸ்லிம் பிரதிநிதித்துவத்தை அதிகரித்துக் கொண்டால் முஸ்லிம் ஒருவரே முதலமைச்சராக வருவார். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கிழக்கு மாகாணத்தை மீட்டித்தந்தது மட்டுமன்றி சகல இன மக்களும் இந்த மண்ணில் சுதந்திரமாகவும், நிம்மதியாகவும் வாழக்கூடிய சூழலை ஏற்படுத்திக் கொடுத்துள்ளதுடன் கிழக்கு மாகாணத்தின் அபிவிருத்தியில் மிகுந்த அக்கறையோடு செயற்பட்டு வருகின்றார்.

மூதூர் முஸ்லிம் மக்கள் அகதியாக்கப்பட்ட போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முஸ்லிம்களின் மீள்குடியேற்றத்தில் அதிக அக்கறை எடுத்த காரணத்தினாலேயே விரைவில் அந்த மக்கள் மீள்குடியேற்றப்பட்டனர். அவ்வாறான நிலை ஏற்பாடாதிருந்தால் வடமாகாண முஸ்லிம்கள் கடந்த 17 வருட காலம் அனுபவித்து வரும் நிலையே ஏற்பட்டிருக்கும். இந்த விடயத்திற்காவது முஸ்லிம்கள் ஜனாதிபதிக்கு நன்றியுள்ளவர்களாக இருக்க வேண்டும்.

கிழக்கு மண்ணைப் பாதுகாக்க வேண்டும் என்பதற்காக ரணில் — பிரபா ஒப்பந்தத்தை கிழித்தெறிந்து யாருக்கும் அச்சப்படாமல் குறுகிய நாட்களில் வெளியேற்றப்பட்ட மூதூர் முஸ்லிம்களை அந்தப்பிரதேசங்களில் மீள்குடியேற்றி வெற்றி கண்டுள்ளார். இன்று சர்வதேச நாடுகளே அவரை வீரத்தளபதியாக போற்றுமளவிற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ திகழ்கின்றார்.

ஜனாதிபதிக்கும் சகோதரர் ரவூப் ஹக்கீமுக்கும் இருக்கின்ற சிறுசிறு பிரச்சினை காரணமாக இன்று அவர் முஸ்லிம்களை பலிக்கடாவாக்கப் பார்க்கிறார். அவர் எடுத்திருப்பது பிழையான முடிவு என்பதை நிச்சயமாக எதிர்வரும் 10ம் திகதி நிரூபிக்கப் போகின்றது. முஸ்லிம்களாகிய நாம் ஆழமாக சிந்திக்கக் கடமைப்பட்டிருக்கின்றோம். அவருடைய இந்தப் பிழையான முடிவை ஒவ்வொரு முஸ்லிம் சகோதரர்களும் வீடு வீடாகச் சென்று மக்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும். இந்த மண்ணிலே தேர்தல் கேட்கும் அவருக்கு முஸ்லிம் முதலமைச்சர் பெறுவதன் தேவைபற்றியோ, முஸ்லிம்களின் எதிர்காலம் பற்றியோ எவ்வித அக்கறையும் இல்லாமல் சிறுபிள்ளைத்தனமாக எதிர்க்கட்சியாக இருக்கப் போகின்றார் என்று சொல்லிக் கொண்டிருக்கின்றார். முஸ்லிம் காங்கிரஸ் 10 அல்லது 12 ஆசனங்களை ஐக்கிய தேசியக் கட்சியோடு சேர்ந்து பெறும் எங்களுக்கு முதலமைச்சர் பதவியல்ல, முக்கியம் எதிர்க்கட்சியாக இருந்தாலும் கிழக்கு மண்ணிலே ஜனநாயகத்தைக் கொண்டுவருவதற்காக வேண்டி போட்டியிடுகின்றோம் என்று தைரியமாகச் சொல்லுகின்றார்.

இந்தத்தேர்தலிலே வெற்றியோ, தோல்வியோ எது வந்தாலும் ஜனாதிபதியையோ, இந்த அரசாங்கத்தையோ அல்லது இந்த அமைச்சரவையையோ ஒன்றும் செய்துவிட முடியாது. இந்த தேர்தலில் வெற்றி என்றால் இந்தப் பிரதேசம் வெற்றி பெறும் அவ்வாறு வெற்றியடைந்தால் இந்தப் பிரதேசம் பாதுகாக்கப்படும், அபிவிருத்தி செய்யப்படும்.

முஸ்லிம் சமூகத்தின் முன்னேற்றத்திற்காக எழுச்சிக்காக மர்ஹூம் அஷ்ரப் கண்ட கனவை நனவாக்க, இந்த கட்சியை பாதுகாக்க, நாம் அனைவரும் ஒன்றுபட வேண்டிய தருணம் வந்துவிட்டது. எனவே முஸ்லிம்களாகிய நாம் நமது சகோதரர் வரவேண்டுமா? அல்லது வேறொருவர் வரவேண்டுமா? என்பதை சிந்தித்து முடிவெடுக்க வேண்டும் என்றார்.

## முதலமைச்சர் பதவி எமது கட்சிக்கே

**பிள்ளையான்**

**(எம்.எஸ்.எம் நூர்தீன்)**

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் போட்டியிடும் கூட்டு கட்சிகளுக்குள் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் அமைப்பு கூடுதலான ஆசனங்களைப் பெறுவதுடன் முதலமைச்சர் பதவியையும் பெற்றுக்கொள்ளுமென தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் அமைப்பின் பிரதித்தலைவர் பிள்ளையான் தெரிவித்தார்.

வாழைச்சேனையில் நடைபெற்ற ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும்போதே பிள்ளையான் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இங்கு தொடர்ந்து அவர் உரையாற்றுகையில், பழையதையெல்லாம் மறந்து நாம் அனைவரும் ஒன்றுபடவேண்டிய சந்தர்ப்பம் வந்திருக்கின்றது. இச்சந்தர்ப்பத்தை நழுவவிடாமல் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

நாம் இழந்தவைகளை மீட்டெடுக்க வேண்டும். அதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் தான் பொருத்தமாகும். அதனால் ஆளும் கட்சியோடு கூட்டுசேர்ந்து போட்டியிடுகின்றோம்.

இந்த அரசாங்கத்தினூடாக அவைகளைப் பெற்றுக்கொள்வோம் என்ற நம்பிக்கை எமக்குண்டு.

தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் தரப்பிலிருந்து 15 பேரை கிழக்கு மாகாணசபைக்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஊடாக பெற்றுக்கொள்வோம் என்ற நம்பிக்கை எமக்கு இருக்கின்றது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் கூட்டாகப் போட்டியிடுகின்ற கட்சிகளுக்குள் எந்தக்கட்சி கூடுதலான ஆசனங்களைப் பெறுகின்றதோ அந்தக்கட்சிக்கு முதலமைச்சர் பதவி வழங்கப்படும் எனும் உத்தரவாதம் வழங்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் கூடுதலான ஆசனங்களைப் பெற்றுக்கொள்வதற்கான வியூகங்களை நாம் வகுத்துள்ளோம்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 9 வேட்பாளர்களை நிறுத்தியுள்ளோம். இதில் 9 பேரையும் வெற்றியடையச் செய்வதற்காக கல்குடாவிற்கு 3 பேரையும் மட்டக்களப்பு தொகுதியில் 3 பேரையும் பட்டியிருப்புத் தொகுதியில் 3 பேரையும் நிறுத்தியுள்ளோம். இவ்வொன்பது பேரையும் வெற்றியடையச் செய்வதற்கான வியூகத்தினை நாம் வகுத்துள்ளோம்.

இன ஒற்றுமையையும் சகோதரத்துவ மனப்பாங்கையும் கருத்திற்கொண்டு நாம் செயற்பட வேண்டும் என பிள்ளையான் மேலும் தெரிவித்தார்.

## கிழக்கின் வளங்களை பிள்ளையான் மூலம் இந்தியாவுக்கு விற்க முயற்சி! தடுத்து நிறுத்துமாறு மக்களிடம் ஜே.வி.பி. செயலாளர் தெரிவிப்பு

(மூதூர் முறாசில்)

மூவினத்தாரும் வசித்துவரும் கிழக்கு மாகாணத்தில் பிள்ளையானை முதலமைச்சராக்கி கிழக்குக்கென தனியான பிள்ளையான் பொலிஸ் பிரிவையும் உருவாக்கி, தமிழீழத்தை தோற்றுவிக்கும் தேச துரோகத்தை நிறுத்த வேண்டுமென மக்கள் விடுதலை முன்னணியின் செயலாளர் டில்லின் சில்வா தெரிவித்தார்.

கந்தளாய் புகையிரத நிலையத்திற் கருகில் அண்மையில் நடைபெற்ற பிரச்சாரக் கூட்டத்தில் பேசும்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

கிழக்கை படையினர் மீட்டெடுத்தபோது மக்கள் விடுதலை முன்னணியே அதனை பிரித்தெடுத்தது. இப்போது இதனை பிள்ளையானுக்கு கொடுக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இது பெரும் துரோகச் செயலாகும். இத்துரோகத்தை அரங்கேற்றுவதற்கு அரசாங்க அமைச்சர்கள் எல்லோரும் கிழக்கு நோக்கிப் படையெடுத்துள்ளனர். கிழக்கு மாகாணத்தைப் பிரிக்க முடியாதென கூறியவர்கள் இப்போது பிள்ளையானை முதலமைச்சராக்க வாக்கு கேட்டு வந்துள்ளனர்.

கிழக்கு மாகாணம் சகல வளங்களும் நிறைந்த அழகான பூமியாகும். பெறுதற்கரிய கனிய வளங்களும் இங்கு காணப்படுகின்றன. இவற்றையெல்லாம் பிள்ளையான் ஊடாக இந்தியாவுக்கு விற்று விடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. எனவே, இதனை தடுத்து நிறுத்துவதற்கு எல்லோரும் ஒன்றிணைய வேண்டும்.

இக்கூட்டத்தில் மக்கள் விடுதலை முன்னணி பாராளுமன்ற உறுப்பினர்களான இராமலிங்கம் சந்திரசேகர், ஜயந்த விஜயசேகர, அனுர குமார திசநாயக்க உட்பட பலர் உரையாற்றினர்.

## புலிகள் ஐ.தே.க.வுக்கு உதவுகிறது

### அமைச்சர் மைத்திரிபால

சர்வட்சி மாநாட்டில் கலந்துகொண்டு இணைந்த மாகாணசபைதான் இப்பிரச்சினைக்கு தீர்வு என அரசியல் யோசனைகளை முன்வைத்த ஹக்கீம், ரணில் குழுவினர் இன்று கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் பங்கேற்கின்றனர். இத்தேர்தலில் இக்குழுவுக்கு இரண்டு ஆசனங்கள் கிடைக்க வேண்டுமென பிரார்த்திக்கின்றோம் என ஸ்ரீ.ல.சு.க. செயலாளர் மைத்திரிபால சிறிசேன கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாடொன்றில் கலந்துகொண்டு கூறுகையில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தொடர்ந்து குறிப்பிடுகையில்,

ஜே.ஆர். ஜெயவர்தனாவுக்கு முடியாமல் போனதை இன்று மஹிந்த ராஜபக்ஷ செய்கிறார். நான்கு ஜனாதிபதிகளின் ஆட்சிக்காலத்தில் கிழக்கு மாகாணத்துக்கான தனியான தேர்தல் ஒன்றை நடத்த முடியாத நிலை தொடர்ந்து வந்தது. இதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முற்றுப்புள்ளி வைத்துள்ளார்.

சம்பூரில் தொடங்கி முழு கிழக்கையும் மீட்கும் பணியை மேற்கொள்ளும்போது ஐ.தே.க.வினர் அப்பகுதி காடு என்றும் கல் என்றும் கூறினர். அந்த காட்டுக்கும் கற் பிரதேசத்திற்கும் இன்று வாக்குக் கேட்டுப் போகும் நிலை ஏற்பட்டுள்ளது.

எதிர்வரும் 10ம் திகதி நடைபெறும் தேர்தலின் முடிவுகள் ரணிலுக்கு மற்றுமொரு தோல்வியாகும். இத்தேர்தலில் வெற்றி பெறுவதற்காக புலிகள் ஐ.தே.க.வுக்கு உதவுவதாக அறிய முடிகிறது. இரண்டு தினங்களுக்கு முன் இதுதொடர்பான பேச்சுவார்த்தையொன்று கொழும்பில் நடைபெற்றுள்ளதாக தெரிய வந்துள்ளது. ரணில் இத்தேர்தலில் 18வது முறையும் தோல்வி அடைவது மட்டுமன்றி, புலிகள் மீண்டும் ஒருதடவை கிழக்கில் தோல்வியைத் தழுவுவார்கள் என ஸ்ரீ.ல.சு.க. செயலாளர் மைத்திரிபால சிறிசேன மேலும் குறிப்பிட்டார்.

## அரச தரப்பினருக்கு வாக்களிக்குமாறு சமுர்தி உத்தயோகத்தர்களுக்கு அழுத்தம்

## ஐ.தே.க. முதன்மை வேட்பாளர் ஹஸனலி தகவல்

(நஜிமிலாஹி)

கிழக்கு மாகாணசபை தேர்தலில் அரச அதிகாரிகளையும் அரச வளங்களையும் தமக்கு சாதகமாக அரசாங்கம் பயன்படுத்த முயற்சிக்கிறது. என மு.காங்கிரஸின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் அம்பாறை மாவட்ட ஐ.தே.க. முதன்மை வேட்பாளருமான எம்.ரி. ஹஸனலி தெரிவித்தார்.

இங்குள்ள சமுர்த்தி உத்தியோகத்தர்களை அழைத்து அரசாங்க தரப்பில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு ஆதரவாக செயற்பட வேண்டும் என்றும் அவர்களின் கட்சி கிளைகள் திறக்கப்பட வேண்டும் என்றும் அச்சுறுத்தியுள்ளதோடு, அரசாங்க தரப்புக்கு சாதகமாக மக்களை வாக்களிக்க வேண்டும் என்றும் சமுர்த்தி உத்தியோகத்தர்கள் பணிக்கப்பட்டுள்ளனர். அவ்வாறு மக்கள் செயற்படாது விட்டால் அவர்களின் சமுர்த்தி முத்திரை பறிக்கப்படும் என்றும் அரசாங்கம் சமுர்த்தி உத்தியோகத்தர்களை எச்சரித்துள்ளது.

அதேபோன்று இன்னும்பல அரச திணைக்களங்களின் உத்தியோகத்தர்களையும் அழைத்து அரசாங்க கட்சிக்கு சார்பாக செயற்படுமாறு கட்டாயப்படுத்தும் நடவடிக்கை களில் அரசாங்கம் ஈடுபடுகிறது. இதனால் நடைபெறவுள்ள தேர்தலில் அரசாங்கத்தின் முழு அழுத்தங்களும் காணப்படும் அரசாங்கம் இவ்வாறு செயற்படுமானால் நீதியான, நியாய மான தேர்தலாக அமையாது.

நடைபெறவுள்ள கிழக்கு மாகாணசபை தேர்தலின் மூலம் எங்களது கூட்டு சுமார் ஒன்பது ஆசனங்களைக் கைப்பற்றும். இந்த தேர்தலை அரசாங்கம் இனவாத தேர்தலாக மாற்றியுள்ளது. இதன் மூலம் கிழக்கு மாகாண பூமியை ஒரு இனவாத பூமியாகவே அரசு மாற்ற முயற்சி

செய்கிறது.

தமிழ் முதலமைச்சர், முஸ்லிம் முதலமைச் சர் என்ற இனவாத வார்த்தைகளை இந்த தேர்தலில் அரசாங்கம் பிரயோகிக்கிறது. இந்த அம்சம் வரப்போகும் முதலமைச்சருக்கு பாரிய சவாலாக அமையும். எனவே, வரப்போகும் முதலமைச்சர் தமிழ், முஸ்லிம் மக்களின் உறவை கட்டியெழுப்புபவராகவும் இருக்க வேண்டும். அப்போதுதான் கிழக்கு மாகாணத்தில் தமிழ், முஸ்லிம் உறவு வலு வடையும் என்றார் எம்.ரி. ஹஸனலி எம்.பி.

## எரிபொருள் விலையேற்றத்தால் பாதிக்கப்படும் இலங்கை போன்ற நாடுகளுக்கு உதவுவதற்கு நிதியம்!

### அமைச்சர் பெளசியின் கோரிக்கையின் பலன்

நாளுக்கு நாள் அதிகரித்துவரும் எரிபொருள் விலையேற்றத்தினால் பாதிக்கப்படும் இலங்கை போன்ற நாடுகளுக்குதவுவதற்கு நிதியம் ஒன்றினை ஆரம்பிப்பதற்கு உலகின் சக்தி அமைப்பு ஆராய்ந்து வருகின்றது.

அண்மையில் ரோம் நகரில் நடைபெற்ற உலக எரி சக்தி அமைப்பின் (world Energy form) கூட்டத்தின் இலங்கை பெற்றோலிய வள அமைச்சர் அல்ஹாஜ் ஏ.எச்.எம். பெளசி விடுத்த வேண்டுகோளையடுத்தே இந்த நிதியத்தை ஏற்படுத்த பெற்றோலிய வள நாடுகள் இணங்கியுள்ளன.

கடந்த வாரம் ரோமில் நடைபெற்ற இம்மகாநாட்டில் பங்குபற்றிய அமைச்சர் பெளசி எரிபொருள் ஏற்றத்தினால் இலங்கை போன்ற அபிவிருத்தியடையும் நாடுகளில் ஜனநாயகத்துக்கு பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டு வருவதாக சுட்டிக்காட்டியுள்ளார். இந்த நிலையிலிருந்து நாடுகளை மீட்டெடுப்பது சகலரதும் கடமை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இக்கூட்டத்தின் பொது அமர்வில் அமைச்சர் பெளசி முன்வைத்த இக்கோரிக்கை அமைப்பின் குழு நிலை அமர்விலும் ஆராயப்பட்டுள்ளது.

சவூதி அரேபிய பெற்றோலிய வள அமைச்சர் உட்பட பலர் இந்த யோசனைக்கு ஆதரவு தெரிவித்ததாக அமைச்சர் பெளசி நவமணிக்குத் தெரிவித்தார்.

இந்த அமர்வில் 60 நாடுகளிலிருந்து பெற்றோலிய அமைச்சர்களும் 50க்கு மேற்பட்ட நிர்வாக இயக்குனர்களும் கலந்து கொண்டுள்ளனர்.

## தமிழ் முஸ்லிம் நல்லுறவு தேர்தலால் குலைந்து விடக் கூடாது: காத்தான்குடி உலமா சபை அறிக்கை

### (எம்.எஸ்.எம். நூர்தீன்)

கிழக்கு மாகாணத்தில் தமிழ் மக்களும், முஸ்லிம் மக்களும் மிக நெருக்கமாக வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். இரு இனங்களினதும் வாழ்க்கை அமைப்பு ஓர் இனத்தை விட்டு மற்றைய இனம் பிரிந்து போக முடியாதவாறு அமைந்திருக்கின்றது. தமிழ் பிரதேசங்களும், முஸ்லிம் பிரதேசங்களும் அடுத்தடுத்து அமைந்துள்ளன. தமிழ் மக்கள் முஸ்லிம் பிரதேசங்களிலும், முஸ்லிம் மக்கள் தமிழ்ப் பிரதேசங்களிலும் தமது தொழில் நடவடிக்கைகளை மேற் கொண்டு வருகின்றனர். தமிழ்ப் பாடசாலை களில் முஸ்லிம் ஆசிரியர்களும், முஸ்லிம் பாடசாகைலளில் தமிழ் ஆசிரியர்களும் கணிசமான அளவு கடமை புரிகின்றனர். அரச அலுவலகங்களிலும் இதேநிலை தான் காணப்படுகின்றது.

இவ்வாறான வாழ்க்கை அமைப்பு இம்மாகாணத்தில் முஸ்லிம்களையும், தமிழர் களையும் பின்னிப் பிணைத்திருக்கின்றது. இந்நிலையில் இம்மாகாணத்திலுள்ள தமிழர் களும், முஸ்லிம்களும் ஒருவரையொருவர் பகைத்து வாழ ஒருபோதும் விரும்புவதில்லை.

துரதிர்ஷ்டவசமாக சில சந்தர்ப்பங்களில் விரிசல்கள், பிளவுகள் ஏற்பட்டிருந்தாலும் கூட அவை, இரு சமூகத்தாரையும் சார்ந்த முக்கியஸ்தர்களது முயற்சிகளால் சீர்செய்யப்பட் டுள்ளன. இதனால் தற்போது இரு சமூகத் தாரும் இணக்கத்துடன் ஒற்றுமையாக வாழ்ந்து வருகின்றனர்.

இந்நிலையில், தற்போது கிழக்கு மாகாண சபைத் தேர்தல் நடைபெறுகின்றது. இத்தேர்தல்

முஸ்லிம்களும் தமிழர்களும் தனித்தனியாக நின்று பிளவுபட்டு, முட்டி மோதிக் கொள்கின்ற ஒரு தேர்தலல்ல. மிகுந்த அர்ப்பணிப்புடன் கட்டிக் காக்கப்பட்டு வருகின்ற தமிழ்—முஸ்லிம் நல்லுறவுக்கு குந்தகம் ஏற்படுத்தக் கூடியதாக இத்தேர்தல் அமைந்து விடக்கூடாது.

இத்தேர்தலில் தமிழர்களும், முஸ்லிம்களும் போட்டியிடுகின்றனர். இவர்களிற் தெரிவு செய்யப்படுவோர் மாகாணசபையை நிர்வகிக்கப் போகின்றனர். இரு சமூகத்தாரும் தாம், தாம் விரும்பியவர்களுக்கு வாக்களித்து தத்தமது பிரதிநிதிகளைத் தெரிவு செய்யப் போகின்றனர். தெரிவு செய்யப்படுபவர்களில் முஸ்லிம்களும் இருப்பர், தமிழர்களும் இருப்பர் எல்லோரும் இணைந்துதான் கிழக்கு மாகாணத்தை நிருவகிக்க வேண்டும்.

எனவே, எல்லாச் சந்தர்ப்பத்திலும் தமிழ்—முஸ்லிம் ஒற்றுமை உறுதியாகப் பேணப்பட வேண்டும். தேர்தல் களத்தில் குதித்திருப்ப வர்கள் இதற்கேற்ப செயற்பட வேண்டும். ஒவ்வொரு சமூகத்திலும் சிவில் சமூக அமைப்புக்கள் இருக்கின்றன. சமய, சமூக நிறுவனங்கள் உள்ளன. இவையும் மிகவும் அவதானமாக இருந்து இரு சமூகங்களுக் கிடையில் எவ்வித பிணக்குகளும் ஏற்பட்டு விடாதவாறு கண்காணிக்க வேண்டும்.

மிகவும் சிரமப்பட்டுக் கட்டிக்காக்கப்பட்டு வரும் தமிழ்—முஸ்லிம் நல்லுறவு தற்காலிக நிகழ் வான தேர்தல் மூலம் குலைந்து விடக்கூடாது. அவ்வாறு குலைந்து போகாமல் பாதுகாப்பதை சம்பந்தப்பட்டவர்கள் உறுதி செய்ய வேண்டும்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ்—முஸ்லிம் நல்லுறவைப் பேணுவதில் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வரும் பொறுப்பு வாய்ந்த நிறுவன மென்ற வகையில் காத்தான்குடி ஜம்இய்யத்துல் உலமா, நடக்கவிருக்கும் மாகாணசபைத் தேர் தல் தமிழ்—முஸ்லிம் நல்லுறவைக் குலைத்து விடக் கூடாது என்பதில் மிகுந்த அவதானம் செலுத்துகின்றது. இதன் காரணமாகவே இந்த முக்கியமான அறிக்கையை விடுக்கின்றது. எனவே, இதில் கூறப்பட்டுள்ள அறிவுறுத்தல் களை அனுசரித்து நடக்குமாறு காத்தான்குடி ஜம்இய்யதுல் உலமா சம்பந்தப்பட்ட அனை வரையும் வினயமாகக் கேட்டுக் கொள்கிறது.

## ஜுனைத், ஸுஹைலுக்கு பதிலாக குவைத் துபாய் புதிய தூதுவர்கள் நியமனம்

குவைத் மற்றும் ஐக்கிய அரபு அமீர் ராஜ்யம் ஆகிய இரு நாடுகளுக்கும் இரு புதிய தூதுவர்களை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பெயர் குறிப்பிட்டுள்ளார்.

குவைத்தின் தூதுவராக கே.எஸ்.சி. திஸாநாயக்கவும் ஐக்கிய அரபு அமீர் ராஜ்யத் தூதுவராக ஜே.எம்.ஜே.பி. பண்டாரவும் நியமிக்கப்படவுள்ளார்.

குவைத்தின் தற்போதைய தூதுவராக எம்.ஏ.சி.எம். ஸுஹைல் பணிபுரிகின்ற அதேவேளை ஐ. அமீர் ராஜ்யத் தூதுவராக என்.எம். ஜுனைதும் பணிபுரிகிறார்.

## நியாயமான தேர்தலை நடத்த ஒத்துழையுங்கள்

**- பப்ரல்**

நடைபெறவிருக்கும் தேர்தலில் ஐ.தே.க. மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கூட்டணியாகவும் முன்னணியிலும் திகழ்கின்றது என்று நீதியும் நியாயமும்மிக்கதுமான தேர்தலுக்கான செயற்பாட்டின் தலைவர் திரு. கிங்ஸ்லி ரொட்ரிகோ தெரிவித்தார். தேர்தல் தினம் நெருங்கும் பொழுது போட்டி மிகவும் கடுமையானதாக இருக்கும். அண்மையில் நடந்து முடிந்த மட்டக்களப்பு மாவட்ட சபை தேர்தல்போல் இல்லாமல் சகல முக்கியமான கட்சிகளும் இத்தேர்தலில் போட்டியிட தத்தமது பிரசார கூட்டங்கள் சூடுபிடிக்க தொடங்கியுள்ளன. இவ்வேளையில் நாங்கள் சகல கட்சிக்காரர்களிடமும் கேட்டுக் கொள்வது என்னவென்றால் நியாயமான ஒரு தேர்தலை நடத்த சகலரும் ஒத்துழைக்க வேண்டும். இதற்கு சகலரும் பொறுமையுடன் ஒத்துழைக்க வேண்டும்.

அதேபோல் பப்ரல் அமைப்பு சகல கட்சிகளுக்கும் பொதுவான நியாயமான கண்காணிப்பாளராக இருக்கும், இந்த தேர்தலுக்காக சுவீடன், கனடா, ஜப்பான் போன்ற நாடுகள் 30 லட்சம் ரூபாவை நன்கொடையாக வழங்கி உள்ளன.

நான் இந்த அமைப்பில் 20 வருடங்களாக சேவை புரிந்து உள்ளேன். அதேபோல்

பப்ரல் அமைப்பின் வேண்டுகோளுக்கிணங்க 6 பேர் கொண்ட சர்வதேச கண்காணிப்புக்குழு தற்பொழுது தேர்தலுக்கு முன்பான தனது கண்காணிப்புப் பணியினை தொடங்கியுள்ளது. தேர்தல் தினத்தன்று பப்ரல் அமைப்பு ஒவ்வொரு வாக்குச் சாவடிக்கும் 2 பேர் வீதமாக 1022 வாக்குச் சாவடிகளிலும் அமர்த்தப்படுவார்கள்.

## சுதந்திர சுமுக தேர்தலுக்கான நிலை மட்டுப்படுத்தப்பட்டுள்ளது தேர்தலுக்கான மக்கள் இயக்கம் தெரிவிப்பு

**(எஸ். விஜயன்)**

கிழக்கு பிரதேசத்தில் அரசியல் செயற்பாட்டாளர்கள் மீது மேற்கொள்ளப்படும் தாக்குதல் காரணமாக சுதந்திரமான சுமுகமான தேர்தல் ஒன்றை நடாத்துவதற்கான நிலை மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலுக்கான மக்கள் இயக்கம் தெரிவிக்கின்றது.

தேர்தலில் போட்டியிடும் அரசியல் கட்சிகள் மற்றும் சுயாதீன குழுக்களின் அபேட்சகர்கள் அதிகமானோர் தமது சொந்த இருப்பிடங்களிலிருந்து வெளியேறியுள்ளனர்.

தேர்தல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள மற்றும் சில அபேட்சகர்களின் குடும்ப அங்கத்தினர்களை இருப்பிடத்திலிருந்து வெளியேற்றியுள்ளனர். தமிழ் அபேட்சகர்களிடையே இந்நிலை அதிகமாக காணப்படுகிறது.

ஐக்கிய சோசலிசவாத கட்சியின் தலைவர் சிறி ரணதுங்க ''மூன்று மாவட்டங்களிலும் தமது கட்சி அபேட்சகர்கள் தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறி தேர்தல் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள்'' என்று கூறுகிறார்.

மட்டக்களப்பு காத்தான்குடி பிரதேசத்தில் கடந்த 21ம் திகதி தேர்தலில் ஈடுபட்டுள்ள டி.எம்.வி.பி. மற்றும் புளொட் ஆதரவாளர்களுக்கிடையில் ஏற்பட்ட மோதலால் மாவட்டத்தின் தமிழ் மக்களுக்கிடையில் பெரும் அச்சத்தையும் பீதியையும் ஏற்படுத்தியுள்ளது. தேர்தலை பற்றி கருத்துக்கூற கூட ஒருவரும் முன்வராத நிலைக்கு நிலைமை மோசமடைந்து காணப்படுகிறது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டும் இதுவரை 13 மோதல் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாக தெரியவருகிறது.

சிங்கள, முஸ்லிம்கள் செறிந்து வாழும் பிரதேசங்களில் மிகவும் ஆர்வத்துடன் தேர்தல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதை காணமுடிகின்றது.

இப்பிரதேச மக்களின் பிரதிநிதிகளை தெரிவு செய்வதற்கான எதிர்பார்ப்பை நிறைவேற்றுவதற்காக பிரதேசத்தில் சுமூகநிலை மற்றும் நீதியை நிலைநாட்ட பாதுகாப்பு பிரிவு மேற்கொள்ளும் அர்ப்பணிப்பு நடவடிக்கை வரவேற்கத்தக்கது.

தேர்தல் நடைபெறும் பிரதேசத்துக்கு அப்பால் பிலியந்தலை குண்டுத்தாக்குதல், திகாமடுல்ல மாவட்ட தேர்தல் அபேட்சகர் ஒருவருடைய காரியாலயம் தாக்கப்பட்டமை மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைமை காரியாலயத்தில் பொலிஸ் சோதனை ஆகியன அரசியற் செயற்பாட்டாளர்களுக்கு தமது கடமைகளை மேற்கொள்வதற்கு தடையாக அமைந்த காரணிகளாகும்.

## புல்மோட்டை மு.ம. வித்தியாலயத்தை 'நவோதய' பாடசாலை அபிவிருத்தித் திட்டத்தில் இணைத்துக் கொள்ளப்படும்

**- அமைச்சர் நஜீப் ஏ. மஜீட்**

**(புல்மோட்டை நவமணி செய்தியாளர்)**

புல்மோட்டையில் அமைந்துள்ள மிகப்பெரிய பாடசாலையான புல்மோட்டை மகா வித்தியாலயத்தை நவோதய பாடசாலைத் திட்டத்தில் இணைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் ஜனாப் அல்ஹாஜ் நஜீப் ஏ. மஜீது அப்பாடசாலைக்கு விஜயத்தை மேற்கொண்டபோது தெரிவித்தார்.

நீண்ட நாட்களுக்கு பிறகு இங்கு விஜயம் செய்த அமைச்சர் நஜீப் ஏ. மஜீது இப்பாடசாலையின் குறைநிறைகளை கேட்டும் சுற்றிப்பார்த்தும் தெரிந்து கொண்டார். அதன்போது

இப்பாடசாலையின் ஆசிரியர்கள், ஆசிரியர் பற்றாக்குறை, கட்டிடப் பற்றாக்குறை, ஆசிரியர் விடுதியின்மை, ஆய்வுகூட வசதியின்மை, நூலகமின்மை, விளையாட்டு மைதானமின்மை, மலசலகூட பற்றாக்குறை போன்ற அனைத்துக் குறைகளையும் நேரில் காண்பித்து தெரியப்படுத்தினர்.

சுமார் (2000) இரண்டாயிரம் மாணவர்கள் கற்கும் இப்பாடசாலைக்கு முப்பத்தேழு (37) ஆசிரியர்கள் மட்டும்தான் கற்பிக்கின்றனர். இதில் ஆங்கிலம், சித்திரம், சிங்களம் போன்ற பாடங்களுக்கு கற்பிக்க ஆசிரியர்களே இல்லை. இதுபோன்று அனைத்து வளமும் பற்றாக்குறை நிலவுவதை அவதானித்த அமைச்சர் இப்பாடசாலையை உயர்வடையச் செய்ய ''நவோதய'' திட்டத்தில் இணைத்துக் கொள்வதால் மட்டுமே இக்குறைகளை நிவர்த்திக்க முடியும். ஆகவே த்திட்டத்தில் இணைத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் ஆசிரியர் பற்றாக்குறையை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கதைத்து நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கூறினார்.

## விசேட தேவையுள்ள பிள்ளைகள்
## சமூகத்திலிருந்து ஒதுங்கியே வாழ்ந்து வருகிறார்கள்

**(நஜிமிலாஹி)**

சமூகத்துக்குள் பலவாறான பிரச்சினைகள் காணப்படுகின்றன. குறிப்பாக வெளிக்கொணரப்படாத பிரச்சினைகள் சமூகம் எனும் வட்டத்துக்குள் தேங்கிக் கிடக்கிறது. இந்த பிரச்சினைகளை வெளிக்கொண்டு வருவது பாரிய சவாலாக அமைந்து விடுகிறது.

குறிப்பாக வெளிக்கொண்டுவரப்படும் சம்பவங்கள் தமக்கு பெரும் சவாலாக அமைந்து விடும் அல்லது சமூகத்தில் தாம் வேறாக பார்க்கப்படலாம் என்ற ஐயத்தினால் இவ்வாறான விடயங்கள் வெளிச்சத்துக்கு வருவது பெரும் குறையாக இருந்து வருகிறது. அதேபோல *விசேட தேவையுள்ளவர்கள் சமூகத்துக்குள் மறைந்து வாழும் ஒரு சூழ்நிலை காணப்படுகின்றது. இதனால் இவர்கள் வாழும் உலகம் வெறும் ஜடமாகவே இவர்களுக்கு காட்சியளிக்கிறது. இவ்வாறான நிலை தொடர்வதனால் சமூகத்தில் பல பிரச்சினைகள் தொடர்ந்தும் மறைக்கப்பட்டு, ஒளிக்கப்பட்டு வருகின்றன. இதனால் மறைமுகமாக சமூகம் பல இழப்புக்களை, சந்திப்பது தெரியப்படாத பக்கங்களாகவே இருந்து வருகின்றன.*

சமூகத்துக்குள் காணப்படும் விசேட தேவைகளை கருத்திற்கொண்டு சில அமைப்புக்கள் செயற்படுகின்றன. அந்த வகையில் மட்டக்களப்பு மாவட்டத்தின் காவத்தமுனை பிரதேசத்தில் விசேட தேவையுள்ள பிள்ளைகளுக்கான காப்பகம் என்ற பெயரில் ஹியுமன் விஷன் ஒரு காப்பகத்தை நடாத்தி வருகின்றது. இந்த காப்பகத்தின் தலைவர் எம்.பி.எம். சித்தீக்கை சந்தித்து இந்த காப்பகத்தின் நோக்கம், தொழிற்பாடு சம்பந்தமாக அலவாடினேன். அவருடன் அலசப்பட்ட விடயங்களை நவமணி வாசகர்களுக்காக இங்கு தருகிறோம்.

**கேள்வி:** விசேட தேவையுள்ள பிள்ளைகளுக்கான காப்பகத்தை அமைப்பதற்கு ஏதுவான காரணம் என்ன?

**பதில்:** சமூகத்தில் இணைந்து செயற்படும்போது பல விடயங்கள் எமக்கு தெரியவருகின்றது. குறிப்பாக சமூகத்திலிருக்கும் பலர் தங்களது தேவைகளை, எண்ணங்களை வெளிப்படுத்த தயங்குகின்றனர். அந்த வகையிலே விசேட தேவையுள்ள பிள்ளைகள் எங்களால் இனம் காணப்பட்டார்கள். இவர்கள் சமூகத்திலிருந்து ஒதுங்கியே வாழ்ந்து வந்தார்கள்; வருகின்றார்கள். தாய் தகப்பனிடமிருந்து அல்லது பாதுகாவலரின் உதவியுடன் தங்கி வாழ வேண்டிய நிலையிலேயே இப்படியான பிள்ளைகள் உள்ளார்கள். எனவே, இவர்கள் தானாக இயங்கக்கூடிய குறைந்தபட்ச தகைமையாவது இப்படியான பிள்ளைகளுக்கு பெற்றுக்கொடுப்பதுதான் விசேட தேவையுள்ள பிள்ளைகளுக்கான காப்பகம் உருவாக்கப்படுவதற்கான காரணமாகும்.

**கேள்வி:** விசேட தேவையுள்ள பிள்ளைகளுக்கான காப்பகத்தின் செயற்பாடு பற்றி:

**பதில்:** இந்த காப்பகத்தில் தற்போது 30 பிள்ளைகள் கல்வி கற்று வருகின்றார்கள்.

இவர்களுக்கு 06 ஆசிரியர்கள் கற்பிக்கின்றார்கள். எமது காப்பகம் ஆரம்பத்திலிருந்த நிலையை விட தற்போது வளர்ச்சியடைந்து கொண்டு செல்கிறது. இதன் மூலம் விசேட தேவையுள்ளவர்கள் சமூகத்தில் இன்னும் பலர் இருக்கின்றார்கள் என்ற தகவலையும் எமக்குணர்த்துகிறது.

இந்த விசேட தேவையுள்ள பிள்ளைகளுக்கான காப்பகம் மட்டக்களப்பு மாவட்டத்தில் காவத்துமுனை பிரதேசத்தில் மாத்திரம்தான் செயற்படுகிறது.

எமது காப்பகத்தில் 3—16 வயதுக்குட்பட்ட பிள்ளைகள் தற்போது கற்று வருகின்றார்கள். இவர்களின் தேவைகள் மற்றும் உடலியல் அமைப்புக்களை வைத்து நான்கு பகுதிகளாக பிரித்து அவர்களுக்கான பயிற்சிகளை வழங்கி வருகிறோம். இதற்கமைவாக ஆரம்பப் பிரிவு என்றும், இயங்கா பிள்ளைகளுக்கான பிரிவு என்றும் கல்வி மற்றும் தொழில்பயிற்சி போன்ற பிரிவுகளாக எமது காப்பகத்திலுள்ள மாணவர்களை அவர்களின் தேவைகளை கருத்திற்கொண்டு 4 பகுதிகளாக பிரித்து செயற்படுகிறோம். அதேபோன்று இந்த பிள்ளைகளின் வீடுகளுக்கு விஜயம் செய்து இவர்களுடன் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்றும் அவர்களது பெற்றோருக்கும் பொறுப்பாளர்களுக்கும் ஆலோசனை வழங்குகின்றோம்.

**கேள்வி:** இந்த காப்பகத்தை நடத்துவதற்கு எங்கிருந்து பொருளாதார உதவிகளை பெறுகின்றீர்கள்?

**பதில்:** இந்த காப்பகத்தை நடத்துவதற்கான ஆலோசனைகளை மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் உளவள வைத்திய நிபுணர் டொக்டர் கணேசன் எங்களுக்கு வழங்குகின்றார். அதேபோன்று மென்கம் தன்னார்வ நிறுவனத்தின் சமூக வளர்ச்சிக்கான இணைப்பாளர் டொக்டர் கிரீஸ் ஸ்டெப்ஸ் எங்களது காப்பகத்தில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு உளவளத்துறை தொடர்பான பயிற்சிகளையும் அவர்களுக்கான வேதனத்தையும் வழங்குகின்றார். அதேபோன்று அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சர் எம்.எஸ்.எஸ். அமீர் அலி எங்களது காப்பகத்துக்கு தேவையான தளபாடங்களை வழங்கியுள்ளார். எங்களது காப்பகம் தற்காலிகமான கட்டிடத்திலே இயங்கியது. இதனை நிவர்த்தி செய்யும் முகமாக ஓட்டமாவடி பிரதேச சபை இரண்டரை ஏக்கர் காணியை எமது அமைப்புக்கு ஒதுக்கியது. இந்த காணியிலே எமது காப்பகம் தற்போது செயற்பட்டு வருகிறது. இவ்வாறு விசேட தேவையுள்ள பிள்ளைகளுக்கான காப்பகத்தை நடாத்தி வருகின்றோம்.

**கேள்வி:** உங்களது காப்பகம் தற்போது எதிர்நோக்கும் பிரச்சினைகள் என்ன?

**பதில்:** தற்போது எங்களது காப்பகத்தில் தண்ணீர் பிரச்சினை காணப்படுகிறது. நிலையான தண்ணீர் இல்லை. அதேபோன்று எங்களது காப்பகத்திலிருக்கும் பிள்ளைகளுக்காக தனியான போக்குவரத்து வசதியில்லை. முச்சக்கரவண்டியிலே வாடகைக்கு பிள்ளைகள் சென்றுவர வேண்டிய நிலையுள்ளது. இன்னும் பல பிரச்சினைகள் உள்ளன. எனவே, ஆர்வலர்கள், தனவந்தர்கள் இந்த மறைக்கப்பட்ட பிள்ளைகளின் வாழ்க்கைக்கு உதவ முன்வருவார்கள் என்ற நம்பிக்கை எம்மத்தியில் உள்ளது. எனவே, இவ்வாறான உதவிகளை சமூக நலன் விரும்பிகள் செய்து தர முன்வர வேண்டும்.

## கண்டியில் இஸ்லாமிய சட்டமன்றம்!

**(கண்டி நிருபர்)**

கண்டியில் இஸ்லாமிய சட்ட மன்றம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. கண்டி, மாத்தளை மாவட்டங்களைச் சேர்ந்த முஸ்லிம் சட்டத்தரணிகள் இதில் அங்கம் வகிக்கின்றனர். அண்மையில் கண்டி முஸ்லிம் மாதர் முன்னணி கேட்போர் கூடத்தில் நடைபெற்ற கூட்டத்தில் இது அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. இக்கூட்டத்தில் ஜனாதிபதி சட்டத்தரணி மஹ்ரூப் உட்பட சிரேஷ்ட சட்டத்தரணிகள் பலரும் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தின்போது பல முடிவுகள் எடுக்கப்பட்டன. பள்ளிச் சொத்துக்கள் உட்பட பொது நிறுவனங்கள் அமைப்புகள் விடயத்தில் சட்ட ஆலோசனைகளை வழங்குதல், புதிய சட்டத்தரணிகளுக்கு சிரேஷ்ட சட்டத்தரணிகளின் ஆலோசனைகளைப் பெற்றுக் கொடுத்தல் உட்பட பல முடிவுகள் எடுக்கப்பட்டன. அதன் செயல்பாடுகளுக்கு தமது பூரண ஒத்துழைப்பை வழங்க சிரேஷ்ட சட்டத்தரணிகள் முன்வந்துள்ளனர்.

எதிர்காலத்தில் அலுவலகமொன்று அமைக்கப்பட்டு அதன் செயல்பாடுகள் மக்களுக்கு பயனளிக்கும் வகையில் விரிவுபடுத்தப்படவுள்ளன.

சட்டமன்றத்தின் தலைவர் சட்டத்தரணி யாக்கூப் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் செயலாளர் பைசர் அலி விளக்கவுரையையும் உதவித் தலைவர் ஹாத்தீம் வரவேற்புரையையும் பஸீலின் வாஹிட் நன்றியுரையையும் நிகழ்த்தினர்.

### மத்திய மாகாண ரீதியில் பதியுதீன் மஹ்மூத் நினைவுதினப் போட்டி

**(கே.ஏ. அலீம்)**

எதிர்வரும் ஜுலை மாதத்தில் நினைவுகூரப்படும் கலாநிதி பதியுதீன் மஹ்மூதின் சிரார்த்த தினத்தையிட்டு மத்திய மாகாண ரீதியில் போட்டி நிகழ்ச்சியொன்றை கம்பளை சாஹிராக் கல்லூரி ஏற்பாடு செய்துள்ளதாக அதிபர் ஹாஜியானி ஹிபாயா தெரிவிக்கின்றார்.

நான்கு பிரிவு மட்டங்களில் மும்மொழிகளிலும் நிகழும் இப்போட்டியில் பேச்சு, கட்டுரை, வரைதல், கவிதை போன்ற நிகழ்ச்சிகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. 12ம், 13ம் தர மாணவர்களுக்கான நாலாவது பிரிவில் 'புதிய கல்விச் சீர்திருத்தத்தில் பதியின் புதிய பாதை எனும் நூலின் பங்களிப்பு', 'சிந்தனைக் கண்களைத் திறந்த சீர்திருத்தவாதி' எனும் பொருளில் பேச்சுப்போட்டியும், 'இன ஒற்றுமைக்காக பதியுதீன் ஆற்றிய சேவை' மற்றும் 'தமிழ் கல்வி மறுமலர்ச்சியில் பதியுதீன்' எனும் தலைப்பில் கட்டுரைப் போட்டியும் '21ம் நூற்றாண்டில் கல்வி உலகம்', 'தாய் அன்பு' போன்ற தொனிப் பொருள்களில் வரைதல் போட்டியும் பதியுதீன் அவர்கள் இன்று உயிரோடு இருந்தால்', 'கல்வியாளர் உள்ளங்களில் வாழும்பதி' எனும் பொருளில் கவிதைப் போட்டியும் இடம்பெறும்.

3ம் பிரிவு 10ம், 11ம் தர மாணவர்களுக்கானது. முஸ்லிம் பெண் கல்விக்கு வித்திட்ட பதியுதீன், சுயநலத்தை முடக்கிய பொதுநலவாதி பதியுதீன் எனும் தொனிப் பொருளில் கட்டுரைப்போட்டியும் சமூக சேவைக்காக தன்னை அர்ப்பணித்த மகான், கம்பளை சாஹிராவின் உயிர்நாடி பதி எனும் தலைப்பில் பேச்சுப் போட்டியும் பெரியோர்களை மதித்தல், நற்பண்புகளை வளர்ப்போம் எனும் கருப்பொருளில் வரைதல் போட்டியும் கல்விக்கு ஒளி கொடுத்த உத்தமர். பொதுநலத்தின் கருவூலம் எனும் தலைப்பில் கவிதைப் போட்டியும் இடம்பெறும்.

ஆக்கங்கள் இம்மாதம் 30ம் திகதிவரை கம்பளை சாஹிராக் கல்லூரி பதி நினைவுப் போட்டிக் குழுவிற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும் என அதிபர் மேலும் தெரிவிக்கின்றார்.

## மூவின மக்களும் நல்லிணக்கமாக வாழக்கூடியதாக கிழக்கை மாற்றுவதே எமது நோக்கம்!
## எங்கள் சக்தி மக்கள் சக்தியே!!
## தேர்தலில் அதிக வெற்றிவாய்ப்பு எங்களுக்கே உள்ளது!!!
## முன்னாள் எஸ்.எஸ்.பி. யும் மு.கா. முக்கியஸ்தருமான அப்துல் மஜீது உறுதி

**(பேட்டி கண்டவர் எஸ். விஜயன்)**

கேள்வி: பொலிஸ் நிர்வாகத்தில் உயர்ந்த பதவிகள் பலவற்றை வகித்துவிட்டு அரசியலில் காலடி பதிததிருக்கிறீர்கள் ஆரம்ப காலத்தை பற்றியும் இதுவரைகால மக்கள் சேவைப்பற்றியும் கூறுங்கள்?

பதில்: எனது அரசியலே மக்கள் சேவைதான். மக்களுக்கு சேவை செய்ய வேண்டும் என்ற ஒரே காரணத்துக்குத்தான் நான் அரசியலுக்கு வந்தேன் வேறு எந்த காரணமும் இருக்கவில்லை. நான் பிறந்த கிராமம் ஒரு தனிமைபடுத்தப்பட்ட கிராமம். இங்கு சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள் சேர்ந்து வாழ்கின்றனர். இந்த பொத்துவில் பிரதேசத்தில் கடந்த 50 ஆண்டுகாலப் பகுதியில் ஒருவரை பாராளுமன்ற உறுப்பினராக தெரிவுசெய்து அனுப்ப முடியாத நிலை இருந்து வந்தது. இந்நிலையில்தான் நான் பொலிஸில் உயர்ந்த பதவியை இராஜினாமா செய்து விட்டு அரசியலுக்குள் பிரவேசித்தேன்.

கேள்வி: கிழக்கு மாகாணத்திலும் குறிப்பாக பொத்துவில் தேர்தல் தொகுதியிலும் இன்று முஸ்லிம்களுக்கு சொந்தமான காணிகளை அபகரித்து பேரினவாத குடியேற்றம் நடாத்தப்படுகிறது. இந்நிலையை தடுத்து நிறுத்த என்ன நடவடிக்கை எடுத்துள்ளீர்கள்?

பதில்: 13வது திருத்த சட்டமூலத்தின் மூலம் காணி அதிகாரங்களும் மாகாணசபையின்

கீழ் வருகின்றன. இப்பிரதேசத்தில் வாழ்கின்ற ஏனைய சமூகங்களுடனும் பேசி ஒரு சுமூகமான தீர்வை எட்டுவதற்கு அரசியல் அதிகாரம் தேவை. நான் பொலிஸ் திணைக்களத்தில் சேவை செய்த காலப்பகுதியில் தேர்தல் நடாத்தப்படும் மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை ஆகிய மூன்று மாவட்டங்களுக்கும் பாதுகாப்புக்கு பொறுப்பாக நாலரை வருடங்கள் கடமையாற்றியுள்ளேன். இங்கு இன்று அரசியலில் ஈடுபட்டிருப்பவர்களைவிட கிழக்கு மாகாணத்தை பற்றியும், இப்பிரதேச மக்களை பற்றியும் நன்கு அறிவேன். ஆகவேதான் இந்த தேர்தலில் நான் போட்டியிட்டு நல்லதோர் வாய்ப்பு கிடைக்குமானால் நாம் முகம் கொடுக்கும் இவ்வாறான பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் பொருட்டு பேச்சுவார்த்தைகளை நடாத்துவேன். இதற்கு முன் மர்ஹூம் அஷ்ரப் கூட எமது மக்களின் பிரச்சினைகளுக்கு சம்பந்தப்பட்ட தரப்புடன் பேச்சுவார்த்தைகளை நடாத்தி தீர்வு பெற்றுக் கொடுத்தார். அதேபோன்று நானும் ஏனைய சமூகங்களை பகைத்துக்கொள்ளாது பேச்சுவார்த்தைகளை நடாத்தி அவர்களோடு சுமூகமாக வாழக்கூடிய ஒரு சூழலை உருவாக்குவதற்கே இந்த அரசியலில் ஈடுபடுகிறேன்.

கேள்வி : முஸ்லிம் காங்கிரஸின் ஆரம்பகால தலைவர்களில் ஒருவரான ஹிஜ்புல்லா தலைமைத்துவத்துடன் முரண்பட்டு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் போட்டியிடுகிறார் அவர் இத்தேர்தலில் அதிக பெரும்பான்மை ஆசனங்களை கைப்பற்றுவோம் என கூறியுள்ளார் இதைப்பற்றி உங்கள் கருத்தென்ன?

பதில்: சகோதரர் ஹிஸ்புல்லா எனக்கு நன்கு பரிட்சயமானவர். நான் கிழக்கு மாகாணத்துக்கு பாதுகாப்புக்கு பொறுப்பாக இருந்தபோது இவர் காத்தான்குடியில் மர்ஹூம் அஷ்ரப்போடு இணைந்து அரசியலில் ஈடுபட்டார். அவருடைய அரசியலில் இருக்கும் அவசரம் இதற்கு முன்னும் அவருக்கு பல தீங்குகளை ஏற்படுத்தியது.

காத்தான்குடி கிழக்கு மாகாணத்திலும் மட்டக்களப்பு மாவட்டத்திலும் முஸ்லிம்களுக்கு முக்கியமான பிரதேசமாகும். இந்த பிரதேசத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் சகோதரர் ஹிஸ்புல்லா அரசாங்கத்தின் சலுகைகளுக்காக சென்று எமது மக்களின் உரிமைகளை மறுப்பது என்பது மிகவும் வேதனைதரக்கூடிய விடயமாகும். ஏனெனில் எல்லோருக்கும் இலகுவில் சலுகைகளை பெற்றுக்கொள்ளலாம் ஆனால் உரிமைகளை பெறுவது என்பது மிகவும் கடினமான விடயமாகும். சகோதரர் ஹிஸ்புல்லா பத்து பிரதிநிதிகளை பற்றி பேசுகிறார். அவர் பிள்ளையானின் பத்து உறுப்பினர்களை பற்றியே பேசுகிறாதே தவிர முஸ்லிம் பிரதிநிதிகளை பற்றி பேசவில்லை.

நாங்கள் முஸ்லிம் பிரதிநிதிகளை பற்றியே பேசுகிறோம் அப்படி கூறும்போது தமிழர்களை வெறுக்கவும் இல்லை சிங்களவர்களை ஒதுக்கவும் இல்லை. இருந்தாலும் பெரும்பான்மை முஸ்லிம்கள் அம்பாறை மாவட்டத்தில் இருப்பதால் அதிகப்படியான முஸ்லிம் உறுப்பினர்களை அம்பாறையில் பெறும்போது சிங்கள மக்களும் எம்மோடு இணைந்து வருகிறார்கள். அப்படி பார்க்கும்போது அவர்களைவிட அதிக உறுப்பினர்களை நாங்கள் பெறக்கூடிய வாய்ப்பு இருக்கின்றது.

கேள்வி: கிழக்கு மாகாணசபை தேர்தலில் முதலமைச்சர் பதவிக்காக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் பிள்ளையான் மற்றும் ஹிஸ்புல்லாவின் பெயர்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. உங்கள் அணியில் முதலமைச்சர் பதவி பற்றி அறிவிக்கப்படவில்லை. இப்பதவி எந்த அடிப்படையில் வழங்கப்படும் என கூற முடியுமா?

பதில்: எங்கள் கட்சி அம்பாறை மாவட்டத்தில் முதன்மை வேட்பாளராக கட்சியின் செயலாளர் ஹஸனலியை நிறுத்தியுள்ளது. எனவே அவரை முதன்மை படுத்துவதுதான் கட்சியின் கொள்கை. ஆகவே அவருக்கு அது போக வேண்டும் என்பது எல்லோரும் விரும்புகிறார்கள். ஆனால் கட்சி எந்த முடிவை எடுக்குமோ அந்த முடிவுக்கு நாங்கள் கட்டுப்பட வேண்டியுள்ளது.

அதேவேளை மக்கள் என்ன அபிப்பிராயத்தை வைத்திருக்கிறார்கள் என்பதை என்னால் கூற முடியாது. இந்த தேர்தலுக்கு பின் எவ்வாறான ஒரு சூழல் உருவாகும் என்பதை நாங்கள் பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

கேள்வி: மட்டக்களப்பு உள்ளூராட்சி மன்ற தேர்தலில் ஆயுதங்களுடன் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டதாக பிள்ளையான் குழு மீது குற்றம் சுமத்தப்பட்டது. ஆயுதங்கள் கலைக்கப்படாத நிலையில் கிழக்கு மாகாணசபை தேர்தலிலும் பிள்ளையான் குழு போட்டியிடுகிறது இந்நிலையில் இத்தேர்தல் நியாயமான முறையில் நடைபெறும் என்ற நம்பிக்கை உங்களுக்கு இருக்கின்றதா?

பதில்: ஜனநாயக உரிமை வேண்டும் என்று கூறிக்கொண்டு ஆயுதங்களை காட்டி மக்களை பயமுறுத்தி, வாக்குகள் அபகரிக்கப்பட்டால் மனித உரிமைகள் அமைப்பு, சர்வதேசம், தேர்தல கண்காணிப்புக்குழுக்கள் இதற்கு விடையளிப்பார்கள்.

கிழக்கு பிரதேசத்துக்கு இது புது விடயமல்ல. வரதராஜப் பெருமாளின் ஆட்சியில் கூட இந்த நிலை இருந்தது. வரதராஜப் பெருமாளின் ஆட்சிக்கு என்ன நடந்தது. வரதராஜருக்கு என்ன நடந்தது என்பது அனைவருக்கும் தெரியும். ஒரு சமூகம் ஆயுத பலத்தால் ஏனைய சமூகத்தை அடக்குமுறைக்கு உட்படுத்துமானால் ஏனைய சமூகத்தையும் ஆயுதம் ஏந்தும்படி தூண்டுவதாகும். தற்போது ஆயுதத்தை வைத்து வென்றுவிடலாம் ஆனால் இதற்கு மறுபக்கமும் இருக்கின்றது. அந்த பக்கம் இதையும் விட விபரீதமாக மாறலாம் என நான் எச்சரிக்கின்றேன்.

கேள்வி: இறக்குமதி செய்யப்படுகின்ற தலைவர்களை தேர்தல் காலங்களில் கிழக்கில் காணமுடிகிறது. தேர்தல் முடிந்த உடன் அவர்கள் கொழும்பில் நின்று விடுவார்கள். இதனால் இறக்குமதி செய்யும் தலைவர்களுக்கு கிழக்க மக்கள் மத்தியில் மதிப்பில்லை என கூறப்படுகிறது இதைப்பற்றி என்ன கூற விரும்புகிறீர்கள்?

பதில்: மர்ஹூம் அஷ்ரப் கிழக்கில் அம்பாறையில் இருந்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸை உருவாக்கி தலைமைத்துவத்தை வகித்தார். ஆனால் அவர் இன்று மறைந்துவிட்டார். அந்த இடத்துக்கு இப்போது இருக்கின்ற தலைவர் நியமிக்கப்பட்டுள்ளார். ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் என்று கூறும்போது நாங்கள் இறக்குமதி ஏற்றுமதியைப் பற்றி பேசுவது மிகவும் தவறு ஏனென்றால் இது கிழக்கு முஸ்லிம் காங்கிரஸ் என்றால் நீங்கள் கூறுவது சரி இது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸாக இருப்பது காரணமாக பிரதேசவாதம் பேச முடியாதும. ஈராக்கில் வாழ்கின்ற முஸ்லிம்களுக்கு ஆதரவு கொடுக்க முடியுமென்றால் ஈரானில் வாழ்கின்ற முஸ்லிம்களுக்கு ஆதரவு கொடுக்க முடியுமென்றால் ஆப்கானிஸ்தான், செச்சின், முஸ்லிம்களுக்காக குரல் கொடுக்க முடியுமென்றால் நாங்கள் ஏற்றுமதி இறக்குமதி என்ன வார்த்தைக்கு மதிப்பு கொடுக்காமல் நாங்கள் முஸ்லிம்கள் அதற்கு ஒரு தலைவர் இருக்கின்றார் என்று கருத வேண்டும்.

கேள்வி: இந்தத் தேர்தலில் உங்கள் அணி எத்தனை ஆசனங்களை கைப்பற்றும்?

பதில்: இத்தேர்தலில் எமது அணி 18 ஆசனங்களை வென்றெடுக்கக்கூடிய வாய்ப்ப நிலவுகின்ற அதேவேளை அம்பாறை மாவட்டத்திலிருந்து அதிகப்படியான உறுப்பினர்களை பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற நோக்கில் செயல்படுகின்றோம்.

திருகோணமலை மாவட்டம் சமமான மாவட்டம். ஆனால் மட்டக்களப்பு மாவட்டம் தம்பி ஹிஸ்புல்லா கட்சியை விட்டு வெளியேறும் கடைசிநாள் வரை நான் முஸ்லிம் காங்கிரஸ் வேட்பாளர்தான் என கூறிவிட்டு கடைசி நேரத்தில் எமது எதிர்பார்ப்பு அத்தனையையும் முறியடித்து விட்டு இன்று எதிரணியில் தஞ்சம் அடைந்துள்ளார் என்பது தனிப்பட்ட முறையில் முஸ்லிம்களுக்கு செய்த துரோகம் என்று தான் கருத வேண்டும். முஸ்லிம்களுக்கு உரிமை வேண்டும். முஸ்லிம்களுக்கு தனி அரசியல் கட்சி வேண்டும் என இக்கட்சியை ஆரம்பித்தவர்களில் ஒருவர் தம்பி ஹிஸ்புல்லா. அப்படி இருந்தவர் இன்று உணர்ச்சி, உணர்வுகளை புறம்தள்ளி சலுகைக்காக தஞ்சமடைந்துள்ளார் இதை சமூக உணர்ச்சியாக கருத முடியாது.

கேள்வி: நாட்டின் ஏனைய மாகாணசபைகளுடன் ஒப்பிடுகையில் சிறுபான்மை மக்கள் பெரும்பான்மையாக வாழும் மாகாணம் இம் மாகாணத்தின் நிர்வாக கட்டமைப்பு எவ்வாறாக அமைய வேண்டும் என நினைக்கின்றீர்கள்?

பதில்: ஐக்கிய இலங்கைக்குள் ஐக்கிய கிழக்கு மாகாணத்தை கட்டியெழுப்புவதுதான் எமது முதலாவது நோக்கம் ஏனென்றால் பெரும்பான்மையாக முஸ்லிம்களும், தமிழர்களும் சிறுபான்மையினராக சிங்களவர்களும் வாழுகின்ற இந்த பிரதேசத்தில் ஏனைய அதிகப்படியான சிங்களவர்களும் குறைந்தபட்சம் முஸ்லிம்களும் தமிழர்களும் வாழுகின்ற மாகாணங்களில் அவர்கள் தலைமை தாங்கி ஆட்சிபுரிய முடியுமென்றால் இந்த சபையை மூவின மக்களும் நல்லிணக்க அடிப்படையில் வாழக்கூடிய ஒரு மாகாணமாக மாற்றுவதே எமது நோக்கமாகும். அதேபோன்று அரசாங்கம் ஆட்சியை கைப்பற்றுமானால் எமது சமூகத்தின் பிரச்சினைகளுக்காக தொடர்ந்து போராடுவோம்.

எமது போராட்டம் ஜனநாயக ரீதியிலானது. இந்த தேர்தலில் நிற்பது கூட ஜனநாயக

ரீதியில் போராடுவதற்காகத்தான். எங்கள் சக்தி மக்கள் சக்தியாகும். மக்கள் சக்தியை வைத்தே நாங்கள் அரசியலை நடத்துகிறோம். வேறு எந்த சக்தியும் எங்களுக்கு கிடையாது. எனவே மனித் சக்தியை வளர்த்து இந்நாட்டில் ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடுகையில் எடுத்துக்காட்டான ஒரு சபையை நடத்திக்காட்டுவோம்.

இந்த அரசாங்கம் பதவிக்கு வந்த பின் தொழிலில்லை. வாழ்க்கைச்செலவு அதிகரித்துக் கொண்டே போகின்றது. ஒரு இனம் மற்றைய இனத்தை சந்தேக கண்ணுடனே பார்க்கின்றது. இதுவரை காலமும் இல்லாத பிரச்சினைகள் இந்த அரசாங்கத்தில் நாம் முகம் கொடுக்க வேண்டியுள்ளது.

எமது நோக்கம் ஒரு சமூகம் மற்றைய சமூகத்துடன் புரிந்துணர்வோடு செயல்படக்கூடிய சூழலை உருவாக்குவதே. நான் முஸ்லிம் மக்களை பிரதிநிதித்துவப் படுத்தினாலும் ஏனைய சமூகத்துக்கும் எனது முழுமையான சேவையை வழங்குவேன். எமது கலை கலாச்சாரங்களை பாதுகாத்துக் கொண்டு ஏனைய மக்களின் கலை கலாசாரங்களை பாதுகாப்பதற்காகவே இந்த தேர்தலில் போட்டியிடுகின்றேன்.

வடக்கில் முஸ்லிம்களுக்கு இடமில்லை அந்த பூமி முஸ்லிம்களின் பூர்வீகம் அல்ல என பிரபாகரன் அங்கிருந்து முஸ்லிம்களை விரட்டியுள்ளார்.

கிழக்கில் முஸ்லிம்களுக்கு இடமில்லை கிழக்கு முஸ்லிம்களின் பூர்வீகம் அல்ல இங்கிருந்து முஸ்லிம்கள் வெளியேற வேண்டும் சவூதிக்கு முஸ்லிம்களை அனுப்பி வைக்க வேண்டும் என்கிறார் சிஹல உறுமயவின் எல்லாவெல மேதானந்த தேரர்.

கிழக்கு முஸ்லிம்களின் பூர்வீகம் அது அவர்களின் தாயகம் என்று உறுதி செய்வதற்கு அல்லாஹ் எமக்கு கொடுத்த அரிய வாய்ப்பு தான் இந்த கிழக்கு மாகாணசபை தேர்தல். இதில் சலுகைகளுக்கு அடிபனியாது உரிமைக்காக போராடும் எமது அணியை வெற்றி பெறச் செய்வதே ஒரே நோக்கம்.

## தமிழ் பேசும் மக்களின் தாயக பூமியை சிங்கள மயமாக்கவே தேர்தல்

### மனோகணேசன் எம்.பி. கூறுகிறார்.

(நஜிமிலாஹி)

கிழக்கு மாகாண சபை தேர்தலானது தமிழ் பேசும் மக்களின் தாயக பூமியை சிங்களமயப்படுத்துவதற்கான திட்டமாகவே நாங்கள் கருதுகிறோம் என மேலக மக்கள் முன்னணியின் தலைவரும் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்தார்.

வட—கிழக்கு இணைப்பை பிரித்து தமிழ் பேசும் மக்களின் தாயகத்தை பேரினவாதத்தைக் கொண்டு நிரப்ப அரசு முற்படுகிறது. எனவேதான் வட—கிழக்கு மீண்டும் இணைக்கப்பட வேண்டும் என்று நாங்கள் வலியுறுத்துகிறோம். அரசாங்கத்தின் இந்த சதிவலையை பின்னுவதற்கு தமிழ் பேசும் இனத்தவர்களும் சேர்ந்து செயற்படுவது வியப்புக்குரியது. இதனை சம்பந்தப்பட்டவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். அரசாங்கத்தின் இந்த செயற்பாடுகளுக்கு துணை போகிறவர்கள் தங்கள் இனத்துக்கு செய்யும் துரோகமாகவே அமையும். நிச்சயமாக இவர்களின் இந்த நடவடிக்கை தமிழ் பேசும் மக்களின் வரலாற்றில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை இவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

கிழக்கு மாகாண சபை தேர்தலின்போது பாரியளவு வன்முறைகள் வெடிக்கும் என்று நடுநிலைமையானவர்கள் சுட்டிக் காட்டுகிறார்கள். ஆயுதங்கள் மூலம் தேர்தலில் குதிப்பது மக்களின் சுதந்திரமான வாக்களிப்புக்கு தடையாக இருக்கும் என அவர்கள் கூறுகின்றார்கள். இவர்களின் இந்த கருத்துக்களுக்கு அரசு முட்டாள்தனமாக பதில் அளிக்கிறது.

கடந்த கால தேர்தல் வன்முறைப்பட்டியலையும் தற்போதைய தேர்தல் வன்முறைகளையும் காட்டி இப்போதைய நிலையில் பாரியளவு வன்முறைகள் இல்லை எனவே, தேர்தலுக்கான உகந்த சூழ்நிலையாக உள்ளது என அரசு கூறி வருகிறது,

இது அரசின் இயலாமைத்தன்மையை எமக்குணர்த்துகிறது. ஆயுதங்கள் மூலம் வன்முறைகள் இடம்பெறாமல் அரசு பாதுகாத்தாலும் ஆயுதங்கள் மூலம் மக்களுடைய எண்ணங்களை அச்சுறுத்தல் மூலம் மாற்ற முடியும். இதுதான் தற்போது கிழக்கில்

நடைபெறுகிறது.

எனவே, தெரிவு செய்யப்படும் முதலமைச்சர் தமிழ் பேசும் மக்களின் அபிலாசைகளையும் விருப்பங்களையும் செயற்படுத்துபவராக அமைய வேண்டும். மாறாக அரசின் நிகழ்ச்சி நிரலை நெறிப்படுத்துபவராக அவர் அமையக்கூடாது என மேலக மக்கள் முன்னணிகளின் தலைவர் மனோகணேசன் மேலும் குறிப்பிட்டார்.

## கிழக்குத் தேர்தலும் பந்தயம் பிடித்தலும்.

கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் தமது கட்சி வெற்றி பெறுவதாகக் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் கூறியபோது, அது குறித்து தம்முடன் பந்தயம் பிடிக்க வருமாறு விடுத்த அழைப்பு ஒன்றினை ரவூப் ஹக்கீம் நிராகரித்துள்ளார்.

இஸ்லாத்தில் பந்தயம் பிடிப்பதற்கு அனுமதியில்லை என்பதனாலே இந்த அழைப்பினை தான் நிராகரிப்பதாக ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

அண்மையில் முஸ்லிம் காங்கிரஸ் தலைவரை ஜாதிக ஹெல உறுமய முக்கியஸ்தரான உதய சம்மன்பில சந்தித்த போதே இக்கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது.

தேர்தலில் தமது தரப்பு வெற்றி பெறும் என்று கூறியபோதே இல்லை நாங்கள் தான் வெற்றி பெறுவோம் பந்தயம் பிடிப்போமா என்று உதய சம்மன்பில கேட்டுள்ளார்.

## கல்விக் கல்லூரிகளது முஸ்லிம் மாணவர் எண்ணிக்கையை உடன் கூட்டுமாறு இடைக்காலச் சிபாரிசுகளைச் செய்க

### அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணி கோரிக்கை

முஸ்லிம் பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையை உடன் போக்குவதற்காக கல்விக் கல்லூரிகளுக்கு அனுமதிக்கப்படும் முஸ்லிம் மாணவர்களது எண்ணிக்கை உடன் அதிகரிக்கப்பட வேண்டும் என இடைக்காலச் சிபாரிசு ஒன்றை கல்வி அமைச்சருக்கு மேற்கொள்ள வேண்டும் என அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் சம்மேளனம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

முஸ்லிம்களது கல்வி நிலை பற்றி ஆராய்வதற்கு நியமிக்கப்பட்டுள்ள கமிட்டிக்கு அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் சம்மேளனம் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளது.

தென்கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் கலாநிதி ஹுஸைன் இஸ்மாயில் ஜெஸீமா இஸ்மாயில், எஸ்.எச்.எம் ஜமீல், கலாநிதி ஹஜர்ஜான் மன்சூர், எம். மர்சூக் ஆகியோரை உள்ளடக்கிய கமிட்டியின் முன்னிலையில் கருத்துக்களை கல்வி அமைச்சரிடம் சமர்ப்பித்தது.

அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் சம்மேளனத் தலைவர் என்.எம். அமீன் தலைமையில் செயலாளர் ரசீத் எம். இம்தியாஸ், உப பொருளாளர் சாம் நவாஸ், கொழும்பு மாவட்ட சம்மேளனத் தலைவர் ஹுஸைன் அஸார் ஆகியோர் கருத்துக்களை முன் வைத்தனர்.

தற்போது கல்விக் கல்லூரிகளுக்கு சேர்க்கும் எண்ணிக்கையினைப் பார்த்தால் முஸ்லிம் பாடசாலைகளது ஆசிரியர் பற்றாக்குறை தீருவதற்கு இன்னும் பத்து வருடங்களாவது எடுக்கும். இந்த நிலையினைப் போக்குவதற்காக இந்த இடைக்கால சிபாரிசினை மேற்கொள்ள வேண்டும் என்று கோரிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

தூதுக்குழுவினர் முன்வைத்த ஆலோசனைகள் வருமாறு:

கொழும்பு பிரதேச முஸ்லிம் பாடசாலைகளின் அவல நிலை காரணமாக கொழும்பிலிருந்து பல்கலைக்கழகங்களுக்கு ஓரிரு மாணவர்களும் தெரிவாகாத நிலை நீண்ட காலமாக இருந்து வருகின்றது. இந்த நிலையைப் போக்குவதற்கு இப்பாடசாலைகளிலிருந்து மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்கும் தெரிவாகும் முறை கமிட்டி சிபாரிசு செய்ய வேண்டும்.

அதேநேரம் கல்விக் கல்லூரிகளுக்கு பயிலுனர்களைத் தெரிவு செய்யும்போது கொழும்பிற்கு தமிழ் மொழியில் ஆட்சேர்க்கும் வெட்டுப் புள்ளியைக் குறைத்து கொழும்பினைச் சேர்ந்த

ஆசிரியர்கள் உருவாக வழி செய்ய வேண்டும்.

முஸ்லிம் பாடசாலைகளது செயற்பாடுகளைக் கண்காணிப்பதற்கு தேசிய மட்டத்திலும், மாகாண மட்டத்திலும் கண்காணிப்புக் குழுக்களை நியமிக்க வேண்டும்.

அரசாங்க பாடசாலைகளிற்குச் செல்லும் மாணவியர்களுக்கு இஸ்லாமிய அடிப்படையிலான சீருடையை அணிந்து செல்வதற்கு அண்மைக்காலமாக மேற்கொள்ளப்பட்டு வரும் தடைகளை நீக்கி ஏற்கனவே உள்ள சுற்று நிருபத்தை அமுல்நடத்த ஆவன செய்யப்பட வேண்டும்.

முஸ்லிம் பாடசாலைகளது கல்வி நிலையைக் கருத்தில் கொண்டு முஸ்லிம்கள் பரவலாக வாழும் பகுதிகளில் குறைந்தது ஒரு பாடசாலையவது பூரண வசதியுள்ள பாடசாலையகா மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கண்டி மற்றும் கொழும்புத் தெற்கில் ஆண்கள் பாடசாலை இல்லாமையால் ஏற்படும் பாதிப்பினை ஈடு செய்வதற்கு இப்பகுதிகளில் உடனடியாக இரு ஆண்கள் பாடசாலைகளை எற்படுத்துவதற்கு சிபாரிசு செய்ய வேண்டும்.

மௌலவி ஆசிரியர் நியமனம் தொடர்பாக கொள்கைத் தீர்மானம் எடுத்து தொடராக வழங்கப்பட வேண்டும்.

நாட்டின் பிதான மொழியான சிங்களத்தை சகல முஸ்லிம் பாடசாலைகளிலும் போதிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

பல்கலைக்கழக அனுமதியின் போது மாவட்ட மட்டத்திற்குப் பதிலக பாடசாலைகளைத் தரப்படுத்தி அவற்றுக்கு வெட்டுப்புள்ளியை தீர்மானித்து தெரிவு செய்யும் முறை அமுலுக்க கொண்டு வரப்பட வேண்டும். இதன்மூலம் மட்டுமே வளங்கள் சமமாகப் பகிரப்படாததனால் ஏற்படும் அநீதியைப் போக்கலாம்.

பாடநெறிகளில் சிறுபான்மை இனங்கள் பற்றிய விடயங்கள் உள்ளடக்கப்படுவதன் மூலம் சிறிய வயதிலிருந்தே இனங்கள் பற்றி ஏற்படும் தப்பபிப்பராயங்களை இல்லாமல் செய்ய முடியும்.

மாகாண மட்டத்திலும் தேசிய மட்டத்திலும் கல்வி அபிவிருத்திக்கு நிதி ஒதுக்கப்படும் போது அந்தந்த இனங்களின் மாணவர்களது எண்ணிக்கை விகிதாசாரத்திற்கு ஏற்ப ஒதுக்கப்பட வேண்டும்.

முஸ்லிம் பாடசாலைகளின் வளர்ச்சிக்கு தகுதியான அதிபர்கள் நியமிக்கப்படாமை அவற்றின் வளர்ச்சிக்குத் தடையாக உள்ளது. எனவே தகுதியான அதிபர்களை உடன் நியமிப்பதற்கு ஆவன செய்தல் வேண்டும்.

## கிழக்கில் அபிவிருத்தியைத் தொடர ஆளுங்குட்சிக்கு ஆதரவளியுங்கள் பொ.ஐ.மு. செயலாளர் அமைச்சர் டி.எம். ஜயரத்ன

கிழக்கு மாகாணத்தை அபிவிருத்தி செய்வதற்கு உலக நாடுகள் பல கோடிக்கணக்கில் நிதி உதவியளிப்பதற்கு வாக்குறுதியளித்திருக்கின்றன. இந்த நிதியை பயன்படுத்தி இலங்கை முன்மாதிரி மிகு மாவட்டமாக அபிவிருத்தி செய்வதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. இதனை முன்னெடுப்பதற்கு கிழக்கு மாகாண சபை ஆளும்கட்சியின் கட்டுப்பாட்டிலிருக்க வேண்டும் என பொதுஜன ஐக்கிய முன்னணியின் பொதுச் செயலாளரும் பெருந்தோட்டத் தொழில் அமைச்சருமான டி.எம். ஜயரத்ன கூறினார்.

கிழக்குத் தேர்தல் தொடர்பாக அமைச்சர் ஜயரத்ன நவமணிக்கு விசேட பேட்டி அளித்தார். அதன் விபரம் வருமாறு:

கே. கிழக்கு மாகாண முஸ்லிம்கள் அரசுக்கு ஆதரவாக இத்தேர்தலில் வாக்களிக்க வேண்டுமா?

அமைச்சர். முஸ்லிம்கள் இந்த மாகாணத்தில் இரண்டாவது பெரும்பான்மையினராக வாழ்கிறார்கள். கடந்த காலங்களில் பயங்கரவாத நடவடிக்கைகளினால் பல்வேறு வகையான இழப்புக்களை இவர்கள் எதிர்நோக்கினார்கள். யுத்த காலத்திலும் நான் கல்முனைப் பகுதிக்கு சென்றுள்ளேன். கம்பளை சாஹிராக் கல்லூரியில் படித்த பல நண்பர்கள் அப்போது தாம் எதிர்நோக்கும் துன்பங்களை என்னிடம் விபரித்தார்கள். சில இடங்களில் பெண்களை மரங்களுக்கு கீழ் ஆண்கள் சுற்றிப் பாதுகாத்ததைப்பற்றியெல்லாம் என்னிடம்

கூறியிருக்கின்றார்கள். இன்று அந்த நிலமை இல்லை. மக்களுக்கு சுதந்திரமாக நிம்மதியாக வாழ முடிந்துள்ளது. கல்முனையில் நடைபெற்ற எமது கட்சியின் கூட்டத்திற்கு மக்கள் ஆயிரக்கணக்கில் வந்திருந்தார்கள். இந்தக் கூட்டத்திற்கு மக்கள் ஊர்வலத்திலே வந்தார்கள் மக்களுக்கு இப்போது அந்தளவு திருப்தியாக இருக்கிறார்கள். இந்த நிம்மதியைப் பாதுகாப்பதற்கு அரசாங்கத்தின் கரத்தை மக்கள் பலப்படுத்த வேண்டும்.

கே: கிழக்கின் அபிவிருத்திக்கு அரசு விசேட திட்டங்களைத் தயாரித்துள்ளதா?

அமைச்சர்: கிழக்கின் அபிவிருத்தி நடவடிக்கைகளை உடன் ஆரம்பிக்குமாறு ஜனாதிபதி ஏற்கனவே அமைச்சர்களுக்கு உத்தரவிட்டுள்ளார். பல சர்வதேச அமைப்புக்கள் கோடிக்கணக்கில் உதவ முன்வந்துள்ளன. இதனைப் பயன்படுத்தி அபிவிருத்தி தொடர வேண்டுமாயின் அரசாங்கத்திற்கு சாதகமான குழுவினருடன் கிழக்கு நிர்வாகம் இருக்க வேண்டும். முஸ்லிம் சமூகம் இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தம் பிரதேசத்தை அபிவிருத்தி செய்துகொள்ள முற்பட வேண்டும். எமது அணியில் முஸ்லிம், தமிழ், சிங்கள அபேட்சகர்களிருக்கின்றார்கள். எவரும் தனியாக தம் இனத்தைப் பற்றி மட்டும் சிந்திக்காமல் ஐக்கியமாக சிந்தித்து செயற்பட வேண்டும்.

கே. இந்த மாகாணத்தின் தமிழ் மக்களுக்கு நீங்கள் கூறும் செய்தி என்ன?

அமைச்சர்: அநேக தமிழ் மக்கள் கடந்த காலத்தில் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக இருந்தார்கள். இந்தப் போராட்டத்தினால் விமோசனம் இல்லை என்பதனை உணர்ந்து வருகின்றனர். கருணா, பிள்ளையான் போன்றோர் ஜனநாயகத்தின் பெறுமதியை உணரத் தலைப்பட்டுள்ளனர். தமிழர்கள் எதிர்நோக்கிய சொல்லொனாத் துன்பங்களிலிருந்து அவர்களை மீட்டெடுப்பதற்கு அரசு உழைத்து வருகின்றது. எமது அரசு தமிழர்களுக்கு நீதியை நிலைநிறுத்தும்.

கே: மாகாணத்தில் வாழும் சிங்கள மக்களுக்கு இத்தேர்தல் தொடர்பாக நீங்கள் கூறும் அறிவுரை என்ன?

அமைச்சர்: அனேகர் வெளியிடங்களிலிருந்து சென்று வாழ்பவர்கள். எனது கம்பளை பகுதியைச் சேர்ந்தவர்களும் இருக்கிறார்கள். இவர்களுக்கு நான் கூறுவது இந்த மாகாணத்தில் வாழும் தமிழ்—முஸ்லிம் மக்களுடன் ஒன்றுபட்டு வாழ வேண்டும் என்பதே. அதன் மூலமும் இந்த மாகாணத்தை அபிவிருத்தி செய்யலாம். தனித்தனியாக பகிர்ந்து செயற்படுவதன் மூலம் விமோசனம் கிட்டாது.

கே: பெருந்தோட்டத் தொழில் அமைச்சு கிழக்கு மாகாணத்தில் புதிய செயற்றிட்டங்களை மேற்கொள்கின்றதா?

பதில்: தென்னை முக்கோணப் ஒன்றை ஏற்படுத்தி இரண்டு லட்சம் தென்னங்கன்றுகளை நடும் திட்டத்தை செயற்படுத்தவுள்ளோம். தவிர கிழக்கு மாகாணத்தில் இறப்பரினை நடமுடியுமா என்பதற்கு ஆராய்ச்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன சாதக மான பதில் கிடைத்தால் உடன் இறப்பர் செய்கையை ஆரம்பிப்போம்.